பாலர் கல்வி

தொகுதி 6	1941 ௵ அக்டோபர் ௴ விஷு ௵ ஐப்பசி ௴	பகுதி 7

"Teach them to Think"

"யோசனை செய்யக் கற்பியுங்கள்"

ஸ்ரீ. எம். எஸ். ஸ்ரீநிவாஸ சர்மா, எம். ஏ.

அறிவின் உதயம்

"செய்வது சுலபம்; யோசிப்பது கடினம்"—என்று ஜெர்மன் ஞானி கேதே (Goethe) சொல்லியுள்ளார். கல்வி மகாநாடுகளிலும், பள்ளிக்கூடப் பரிசளிப்பு விழாக்களிலும் தலைமை வகிக்கும் வித்தியா வித்பன்னர்கள்—"மாணவர்களைச் சிந்தனையில் பயிற்றவேண்டும்.......... அவர்களுக்கு யோசனை செய்யக்கற்றுக் கொடுங்கள்"—என்று அடிக்கடி வற்புறுத்துவதுண்டு. ஏனென்றால் பரீக்ஷை தேறுவதையே லக்ஷியமாகக் கொண்டு மாணவர்கள் பாடங்களை நெட்டுருப்போட்டு விடுகிறார்கள்; அறிவை ஸம்பாதிக்கும் ஆற்றல் அவர்களுக்கு உண்டாவதில்லை என்பது அவர்கள் அபிப்பிராயம். உண்மையாகவே, சிந்தனா சக்தியை வளர்ப்பதுதான் கல்வியின் நோக்கம். கணக்கு, இலக்கியம், சரித்திரம், விஞ்ஞானம் முதலிய பாடங்கள் இந்த நோக்கத்திற்கு அநுகரணமான உபாயங்களேயாம். விஷயங்களையும், ஸம்பவங்களையும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டால் மாத்திரம் போதாது; அவைகளைப் பற்றிய அறிவை ஸம்பாதிப்பதுதான் முக்கியம். இந்த அறிவு சிந்தனையின் செயலாகும். எனக்கு ஒரு விஷயம் "தெரியும்" என்று சொன்னால், அதைப் பற்றி நான் ஆழ்ந்து யொசித்து, அது எப்படி உண்டாயிற்று, அது எந்த வர்க்கத்தைச் சேர்ந்தது, அதன் அம்சங்களும், குணங்களும் ஸ்வ

ரூபங்களும் என்ன, அதனால் என்ன பயன்,—என்பவைகளைப்பற்றி ஆராய்ந்து அறிந்து கொண்டேன் என்று அர்த்தம்.

எனவே, யோசிக்காவிட்டால் அறிவு உதிப்பதில்லை என்பது நிச்சயம். யோசிப்பது மனதின் தொழில். மனித ஜன்மத்திற்கு உயர்வைத்தரும் பகுத்தறிவு, நுட்பபுத்தி, பாஷாஞானம் ஆகிய இவ்வாற்றல்கள் எண்ணத்தால் பயிற்சியடைந்து வளர்கின்றன. அறிவே சக்தி. கொடிய விலங்குகளை அடக்கி, இயற்கையை வென்று, விஞ்ஞான அறிவையும் ஆத்ம சக்தியையும் சிருஷ்டிக்கும் கருவி யோசனையாகும். கவியும், கதையும், விஞ்ஞான சாஸ்திரங்களும் நுட்பகலைகளும், லௌகிக திட்டங்களும், தத்துவதர்சனங்களும் நிர்மாணிப்பதற்கு யோசனைதான் அடிப்படை.

யோசனை — அநுமானம்

யோசனை யென்பது, ஒரு பிரத்தியேக விஷயத்தைப் பற்றி, ஒரு திட்டமான பலனை உத்தேசித்து நடத்தப்படும் மனத்தொழிலாகும். நம் எதிரே நடக்கும் ஸம்பவங்களைப்பற்றியும், நம் ஞாபகத்திலிருக்கும் நடந்துபோன காரியங்களைப் பற்றியும்—அவைகளின் காரணங்கள் என்ன? அவைகளின் போக்கு எப்படி, அவைகளின் முடிவும் பயனும் யாவை? என்பவைகளை யுணர எண்ண மிடுகிறோம். எவ்வளவோ படிக்கிறோம்; நமது புலன்களுக்கு முன் எத்தனையோ விஷயங்கள் தோன்றுகின்றன. ஆனால் அவைகளை உற்று நோக்கி, ஊன்றிக் கவனித்து, அவைகளின் பரஸ்பர ஸம்பந்தங்களையும், ஒற்றுமை வேற்றுமைகளையும் காரணகாரியங்களையும் அநுமானித்த பின்புதான், அவை நமக்குத் தெளிந்த் அறிவைத் தருகின்றன.

அநுமானமே அறிவு. அதுதான் சிந்தனையின் உச்சநிலை. துப்பறியும் போலீஸ் நிபுணர்கள், கீழே விழுந்து கிடக்கும் பொத்தானையோ அல்லது ரிப்பன் துண்டையோ உளவாக வைத்துக்கொண்டு, கொலை நடந்த முறையையும், கொலையாளியையும் கண்டு பிடிக்கிறார்களல்லவா? இந்த அற்புதச் செய்கை அநுமானத்தின் மஹிமையாகும். அநுமானம் இருவகைப்படும். சொந்த அநுபவத்தில் கண்டறிந்த தனிப்பட்ட உண்மைகளைக்கொண்டு ஒரு பொது விதியை ஊஹித்தல் "ஆகமன அநுமானம்" (Inductive Inference) எனப்படும். விஞ்ஞான ஆராய்ச்சிகள் யாவும் ஆகமன சிந்தனையின் சிருஷ்டிகள் எனலாம். பொது விதியைத் தனி விஷயங்களில் பிரயோகித்து அவைகளின் லக்ஷணத்தை யறிதல் "நிகமன அநுமானம்" (Deductive Inference) எனப்படும். உதாரணமாக, உலோகங்கள் பகாப்பொருள்கள் என்கிற பொதுநியதியை, இரும்பு விஷயத்தில் பிரயோகம் செய்து, அது உலோகமாயிருப்பதால், அதுவும் பகாப் பொருளாய்த்தானிருக்க வேண்டுமென்று ஊஹித்தல் நிகமன அநுமானம்,

விஷயங்களும், பாஷையும்

பரந்த அனுபவமும், விசேஷ கவனமும், ஏராளமான விஷயங்களும், நல்ல ஞாபக சக்தியும் சிந்தனையின் முக்கிய தேவைகள். மனம் சூனியமாக இருந்தால் யோசிப்பதெப்படி? விஷயங்கள் மனத்தொழிலுக்கு அஸ்திவாரங்கள். அவைகளைச் சோதிப்பதற்கு அநுகூலமான ஆழ்ந்த கவனமும், நூதன உண்மைகளையறிய வேண்டுமென்கிற அவாவும் உதிக்கவேண்டும். பொருள்களின் குணங்களைப் பொருக்கியெடுக்கும் சிரத்தையும், அவைகளைப் பிறபொருள்களுடன் ஒப்பிட்டுப்பார்த்து, தாரதம்மியங்களைக் கண்டுபிடிக்கும் உள்உணர்ச்சி (Insight) யும் சிந்தனையின் உத்வேகத்தை அதிகரிக்கின்றன. பிறகு ஆராய்ந்தறிந்த விஷயங்கள் யாவையும் ஒன்றாக இணைத்து, ஒழுங்கு படுத்தி அறிவுதிட்டம் நிர்மாணித்தல் சிந்தனையின் உயிர் நிலையாகும்.

மனதில் உதிக்கும் எண்ணங்களை வெளியிடுவதற்கும், அவற்றைத் தர்க்கரீதியில் உபயோகித்து உண்மையை யறிவதற்கும் திருத்தமான மொழி அவசியம். பாஷை ஸ்பஷ்டமில்லாவிட்டால் எண்ணங்களால் பிரயோஜனமில்லை மொழிகள் கருத்துக்களின் வாஹனமாத்திரமல்ல; அவைகளின் அவதார மென்றே சொல்லவேண்டும். எனவே, சொற்களின் பொருள்களைப் பொருத்தமுற உணர்ந்து உபயோகிக்க வேண்டும். ஐயந்திரிபற விஷயங்களைச் சிந்தித்து, உண்மையறிவைப் பெறுவதற்கு இரண்டு தேவைகள் முக்கியமானவை:—(1) சொற்பொருளின் வரையறை (Definition) அதாவது, நாம் உபயோகிக்கும் ஒவ்வொரு பதத்திற்கும் இன்னது பொருள் என்று திட்டமாக உணர்தல். (2) அநுமானம் என்கிற மனத்தொழில் தேர்ச்சியடைதல்.

"ஏன்? எப்படி?"

எந்த விஷயமாயிருந்தாலும்—ஏன், எப்படி, முதலிய கேள்விகளைப் போடக்கற்றுக்கொண்டால் யோசிக்கும் திறமை தானாக விருத்தியடையும். உபாத்தியாயர் சொல்லிக்கொடுத்த பாடங்களைப்பற்றி அவசரப்படாமல் யோசனை செய்துபார்த்தால்தான் அவற்றின் தாத்பரியம் விளங்கும். உதாரணமாக, கம்பர், "ஏரெழுபது" என்கிற நூலில்—"வறப்புயர கோனுயர"—என்கிறார். வயலின் வறப்புக்கும் அரசனின் உயர்வுக்கும் என்ன ஸம்பந்தம் என்கிற கேள்வியைக்கேட்டு, யோசித்தால், அதன் ரஹஸ்யம் புலப்படும். நன்றாக மழைபெய்து ஆறு ஏரிகள் நிறைந்தால், விவசாயிகள் வயல்களின் வறப்புகளை உயர்த்திக்கரைபுரள ஜலத்தைத் தேக்கிப் பயிரிட்டு, ஏராளமாக அறுவடை செய்து, ஸந்தோஷமாய் வரிகளைச் செலுத்துவார்கள். அப்போது அரசனுடைய பொக்கிஷம் நிறைந்து, அவன்சக்தியும் செல்வாக்கும் அதிகரிக்கும். இந்த அறிவு உண்டாக மனத்தொழில் அவசியமல்லவா?

நெருக்கடிகளில்

நாம் எந்தெந்த ஸந்தர்ப்பங்களில் ஆலோசிக்கிறோம் என்பதைப் பரிசீலனைசெய்தால், சிந்தனையின் லக்ஷணங்கள் நன்குவிளங்கும். நம் வாழ்க்கை எளிதாக நடைபெறுகிறதில்லை. நெருக்கடியான ஸமயங்களும் எதிர்பாராத ஸம்பவங்களும் அடிக்கடி நேரிடுகின்றன. பணமுடையினின்றும், ஆபத்துக்களினின்றும் தப்புவதெப்படி? பிறர்மனம் கோணாமல் நடக்கும் வகையென்ன? உத்தியோகம் பெறும் வழி யாது? —என்னும் வாழ்க்கையிலேற்படும் கடினமான சிக்குகளை விடுவிப்பதற்குரிய ஆற்றல் சிந்தனைக்கிருக்கிறது. திகைப்பு, கலக்கம், தயக்கம், சிரமமான பிரசினை—இவைகளைத் தீர்ப்பதே ஆலோசனையின் தொழில். பிரசினையை யறிந்து அதன்பலன்களை ஊஹித்து, ஒப்பிட்டுப்பார்த்து, ஒரு முடிவான தீர்மானத்திற்கு வருகிறோம். இதுதான் சிந்தனையின் போக்கு.

விளக்கிக்காட்ட

ஒரு விஷயத்தை விளக்கிக் காட்டவேண்டுமானால்—அதன் இயற்கை நியதி என்ன? அதன் ஸ்வபாவ லக்ஷணம் யாது? அது எப்படி உண்டாயிற்று? அதன் பிரயோஜனம் எத்தகையது? என்பவைகளைக் கண்டறிய வேண்டும். விஞ்ஞான சாஸ்திரங்களின் நோக்கம், இயற்கை ஸம்பவங்களின் காரணங்களையும், விளைவுகளையும் நிர்த்தாரணம் செய்தலேயாம் இதற்கு நுண்ணிய சிந்தனை வேண்டும். மரத்திலிருந்து கீழே விழுந்த ஆப்பிளைக் கண்டதும் சிறுவன் நியூடனுக்கு அதை உடனே கடித்துத் தின்ன வேண்டுமென்கிற எண்ணம் தோன்றவில்லை. பழம் கீழே விழுவானேன்? அப்படியே, அந்தரத்தில் ஏன் நிற்கக்கூடாது? அல்லது ஆகாயத்தில் ஏன் பறக்கக்கூடாது? என்கிறகேள்விகள் மனதில் உதித்தன. பிறகு யோசித்து யோசித்துக் கடைசியில் பூமியின் ஆகர்ஷண சக்தியின் மர்மத்தையும் அதன் மூல தத்துவத்தையும் கண்டுபிடித்து, விஞ்ஞான சாஸ்திரத்தில் ஒரு புதிய சகாப்தத்தை ஆரம்பித்தார். ஏன்? எப்படி? என்கிற பிரசினைகளுக்குப் பதிலளிப்பது ஆலோசனையின் காரியம். அஸாதாரண, விபரீத ஸம்பவங்களுக்குத்தான் நாம் காரணங்களைத் தேடுகிறோம். ஆனால் விஞ்ஞான மனப்பான்மையுடையவர்கள் உலக விஷயங்கள் யாவையுமே காரண காரிய நியதிப்படி ஒழுங்குபடுத்தி அறிவை வளர்க்கிறார்கள். காரணங்களைப் பற்றிய அறிவுதான் இயற்கையின்மீது அதிகாரம செலுத்தும் சக்தியை யளித்து, பயத்தையும் மூடபக்தியையும் விரட்டியடித்து, நாகரிக வாழ்வு நடத்த உதவியாயிருக்கிறது.

விமர்சனம்

"வித்யா விமர்ச ரூபிணீ"—என்று சொல்வதுண்டு. வாழ்க்கையனுபவங்களையும், படிக்கும் விஷயங்களையும், பிரசாரம் செய்யப்படும்

ராஜீய, பொருளாதார, ஸமூஹக் கொள்கைகளையும் ஆழ்ந்து சிந்தித்து, உள்ளதை உள்ளபடியே உணரவேண்டும். கக்ஷி வாதங்களையும், மூட நம்பிக்கைகளையும், சுயநலக் கொள்கைகளையும் அறவே யொழித்து, உண்மையைக் கடைப்பிடிக்க ஆலோசனை அவசியமாகிறது. சிந்தனை சக்திக்கு ஸந்தேஹம் ஒரு பெரிய தூண்டுகோலாகும். எந்த அபிப்பிராயத்தையும், எந்தக் கொள்கையையும் ஸந்தேஹிக்கும் மனப்பான்மையைப் பயின்றால், தக்க அத்தாக்ஷிகளுடன் உண்மையை நிரூபித்து, அறிவை விருத்தி செய்ய ஸௌகரியமாக விருக்கும்.

காரியசித்தி

ஒரு பொது விதியோ அல்லது ஒரு தத்துவமோ யாராவது சொல்லக் கேட்டால், அதை ஆக்ஷேபிக்கவோ அல்லது ஆமோதிக்கவோ யோசனை செய்கிறோம். "ஸ்திரீகள் நிர்வாக சக்தி யற்றவர்கள்"—என்றோ, "சுதந்திர மிழந்த நாட்டில் கலைகள் குன்றும்"—என்றோ யாராவது சொன்னால், நாம் தீர யோசித்து, சரித்திரத்திலிருந்து பல திருஷ்டாந்தங்களை எடுத்துக் காட்டி அவ்வபிப்பிராயங்களை எதிர்த்து வாதம் செய்கிறோம்.

"எண்ணித் துணிக கருமம்"—என்கிறார் வள்ளுவர். "குதிப்பதற்கு முன் எட்டிப்பார், செய்வதற்கு முன் தீர யோசி"—என்பது பழமொழி. நம் காலத்தையும் சக்தியையும் தவறான காரியங்களிலும், முடியாத விஷயங்களிலும் வீணில் செலவிட்டுத் திண்டாடாமலிருப்பதற்கு, உத்தேசித்த முயற்சிகளால் நேரிடக்கூடிய பலாபலன்களை முன்னாடியே ஊஹித்தறிய சிந்தனைசக்தி நமக்கு அளிக்கப்பட்டுள்ளது. வருங்காலத்துக்குத் தக்க திட்டங்களை நிர்ணயிப்பதற்கும், நேரிடக்கூடிய தவறுகளையும் தோல்விகளையும் தவிர்ப்பதற்கும் யோசனை உதவியாயிருக்கிறது.

ஸன்மார்க்கம்

மேலும், நிர்ப்பந்தமின்றி, ஆர அமர யோசனைசெய்து முடிவுக்கு வரும் சக்திதான் மனிதனுடைய உண்மையான சுதந்திரம். இச்சுதந்திரத்தின் சிருஷ்டிகள்தான், விஞ்ஞானம், காவ்யம், வேதாந்தம், நாடகம், சிற்பம், ஸங்கீதம் முதலிய கலைகள். நற்குண நன்னடத்தைகள் உத்தம லக்ஷியங்களால் நீண்ட கால யோசனையினால் உண்டாக்கப்படும் மனக்கற்பிதமான எண்ணங்களாம். அதனால்தான் மானிட ஜன்மத்தில் தர்மம், ஸத்யம், சீலம், கருணை, வீரம் முதலிய உத்தம குணங்கள் உதயமாகின்றன.

குழந்தைகளின் கனவும் கிலியும்

S. ஜகந்நாதன், டீசர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை.

ஸ்வர்ணம்பாளுக்கு வயது மூன்றிருக்கும். ஒரு நாள் பகலில் தெருவில் மாடுகள் ஒன்றோடொன்று முட்டிக்கொண்டு சண்டை செய்வதைக்கண்டு பயந்து உள்ளே வந்துவிட்டாள். அவள் அதே ஞாபகமாய் இருந்தாள். வெளியில் வாய்விட்டு ஒன்றும் சொல்லவில்லை. இரண்டு நாள் கழித்து இரவு தூக்கத்தில் உரக்க வீறிட்டு அழுதாள். அவள் பெரிய தாயார் குழந்தையை எழுப்பி மடிமீது வைத்து ஏன் அழுதாய் என்று கேட்க மாடு துரத்திக்கொண்டு வந்தது என்று பதில்

சொன்னாள். இரண்டு நாள் முன் நடந்த சம்பவம் கனவில் தோன்றியது. வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளாத விஷயம் மனதில் அடங்கியிருந்தது. உள் நினைவில் அதே சம்பவம் குடிகொண்டு இருந்தது. அவள் தங்கை பகலில் விளையாடுகிறாள். இரவில் தூக்கத்தில் பிதற்றுகிறாள். "அதெல்லாம் தரமாட்டேன், போடா குரு," என்கிறாள். மூன்றுபேரும் பகலில் விளையாடுகிறது வழக்கம். ஒருவர்க்கொருவர் வாக்குவாதம் ஏற்படும். வாக்குவாதம் முடிவதற்குள் ஏதோ காரணத்தால் விளையாட்டு கலைந்துவிட்டது. உள் நினைவில் மாத்திரம வாக்குவாதம் நிற்கவில்லை. இது இரவில் தூக்கத்தில் தோன்றிவிட்டது. இவ்வாறு நிம்மதியான தூக்க நேரத்திலும் தோன்றி மறையும் திரைப்படக் காட்சியாகிய ஸ்வப்னங்கள் பல உள. என் வகுப்புக் குழந்தைகளின் கனவுகளின் தன்மையை அறிய அவாக்கொண்டு தலைக்கு ஒரு கால் கடிதம் கொண்டு தாம் கண்ட கனவுகளை எழுதித்தரச் செய்தேன்? அவர்கள் எழுதியவை பின்வருமாறு :

கனவுகள்

1. என்னைக் கடவுள் வந்து கூட்டிக்கொண்டு போவதாகக் கண்டேன். (எஸ். குப்புசாமி, 11 வயது.)

நான் கடவுளைக் கண்ணால் பார்க்கிறாற்போல் கனவு கண்டேன். (ஜெ. குருமூர்த்தி, 10 வயது.)

2. நான் ஒரு குட்டையில் விழுந்து இறந்து போவதுபோல் கனவு கண்டேன். (டட், 9 வயது.)

நான் ஒரு கிணற்றில் விழுந்து மறுபடியும் கரையில் வந்துவிட்டேன் என்று கனவு கண்டேன். (லயனல், 9 வயது.)

3. நான் ஒருநாள் காட்டிற்குப் போனேன். என்னை ஒரு சிங்கம் துரத்திக்கொண்டு வந்தது. நான் ஒரு குகைக்குள் புகுந்துகொண்டேன். சிங்கம் போய்விட்டது. பிறகு நான் வெளியே வந்தேன். (எப். சி. தேவி.)

நான் நான்கு யானைகளைக் கண்டு பயந்தேன். கதவைத் தாள் போட்டுவிட்டு எங்களுடைய அப்பா பக்கத்தில் படுத்து தூங்கிவிட்டேன். (வி. இராமச்சந்திரன், 10 வயது.)

4. என் தாயும் என் அண்ணனும் ஒரு ஊருக்குப் போகும் வழியில் ஒரு திருடன் வந்து நகையை யெல்லாம் எடுத்துக்கொண்டுபோய் ஒரு குழி தோண்டி அதில் நகைகளைப் போட்டு ஒரு மலையில் போய் ஒளிந்திருந்தான். (சுசிலா டண்டில், 9 வயது.)

நான் ஒருநாள் தூங்கிக்கொண்டிருக்கும்பொழுது யாரோ என் அறைப் பையில் கைவிட்டு பணம் எடுத்ததுபோல கனவு கண்டேன். (லோகநாதன், 10 வயது.)

5. நாங்கள் எல்லோரும் சொந்த ஊருக்குப் போய் திரும்பி வரும்பொழுது அடுத்த ஊரில் புயல்காற்று அடிக்கிறது என்று யாரோ சொன்னதால் நாங்கள் அங்கேயே இறங்கிவிட்டோம்.

(ஆர். பாகீரதி, 11 வயது.)

நான் ரயிலில் போவதுபோல் கனுக்கண்டேன்.

(என். ஆர். சீனிவாசன், 9 வயது.)

6. பாம்புக் கூட்டமாக வருவதுபோல் கனவு கண்டேன்.

(லக்ஷ்மண சுவாமி, 9 வயது.)

ஒரு பாம்பு ஒரு மரத்தில் ஏறுவதுபோல் கனவு கண்டேன்.

(கே. இராமசாமி, 9 வயது.)

7. ஒருநாள் என் ஆயா இறந்துவிடுவதுபோல் கனவு கண்டேன். மறுநாள் இறந்துவிட்டாள்.

(எஸ். வி. கோபாலசாமி 10-வயது.)

நான் என் பாட்டி இறந்துவிட்டதாக கனவு கண்டேன்.

(சுசீலா, 10 வயது.)

8. ஜெர்மானியர் என்னிடம் வந்து 'நீ என் பக்கம் வா' என்றனர். நான் "என் மன்னர்பக்கம்தான் போவேன்" என்று சொன்னேன். உடனே என்னை அவர்கள் சுடுவதைக் கண்டு எழுந்தேன்.

(முனீருல்லா ஷரீப், 10 வயது)

தெருக்களிலுள்ள லைட்டுகளை அணைத்துவிடுவதுபோல கனவு கண்டேன். (கே. கிருஷ்ணசாமி, 12 வயது.)

9. ஒரு வீடு தீப்பற்றி எரிவதுபோல் கனவு கண்டேன்.

(எஸ். மல்லிகேஸ்வரன், 10 வயது.)

ஒரு மனிதன் என்னை கன்றில் உட்காரவைத்து ஒரு அரச மரத்தினடியில் போய் நெருப்பில் தூக்கிப்போட்டார். (குப்புசாமி.)

10. நானும் ஒரு பூதமும் சண்டை செய்தோம் அப்பொழுது நான் அதைக் கத்தியினால் குத்தினேன் உடனே இரண்டு பூதம் வந்தது பிறகு எழுந்தேன். (ஏ. கோபால்.)

நான் தூங்கிக்கொண்டிருக்கும்பொழுது ஒரு பிசாசு என்னைத் தூக்கிக்கொண்டுபோய் ஒரு காட்டில் விட்டுவிட்டது. நான் அங்கும் இங்கும் அலைந்து திரிந்து வீடுவந்து சேர்ந்தேன். (பி. வி. ஜானகிராமன்.)

11. என்னை ஒரு பூதம் கொன்றதுபோல் கனவு கண்டேன்.

(வி. வைத்தியநாதன், வயது 9.)

நான் ஒரு பூதத்தினிடத்தில் அகப்பட்டுக்கொண்டேன் என்று கனவு கண்டேன். (கே. சுப்பிரமணியன், 8 வயது.)

12. நான் ஊரிலிருக்கிற தம்பிக்கு ஜுரமாயிருக்கிறதென்று கனவு கண்டேன். (கே. மீனாக்ஷி, 10 வயது.)

ஒருநாள் பகல் சீதபேதியால் இருக்கும்போது அசுரர்கள் ஜனங்களை குத்துவதுபோலவும் தூக்குப்போடுவது போலவும் முதலியவைகளை கனவு கண்டேன். (எஸ். வி. கோபாலசாமி, 10 வயது.)

கனவுகள் சம்பந்தமான சில விஷயங்கள்.

மேலே கூறப்பட்ட குழந்தைகள் கனவுகளில் இன்பமான காட்சியும் பயங்கரமான தோற்றங்களும், திடுக்கிடக்கூடிய சம்பவங்களும் தோன்றியிருப்பதைக்காணலாம். தெய்வ சிந்தனை தண்ணீரில் மூழ்கி விடுதல், மிருகங்களுடன் போராடுதல், திருட்டுப் பயம், ஊர்ப்பிரயாணம், பாம்பு, பேய் பிசாசங்கள், மரணம் நிகழ்சம்பவங்கள், நெருப்பு, இருட்டில் அலைதல், நோய் இவை போன்ற கனவுகளைப் பலவாறு வகுக்க முடியும். சில சமயங்களில் கனவுகளில் தோன்றியவைகள் திரும்ப மனதுக்கு எட்டாமலே மறைந்துவிடும்.

நிறைவேறக்கூடாத சில யோஜனைகளில் அவாவிருப்பின் அவை ஸ்வப்பனத்தில் தோன்றி நிறைவேற்றப்பட்டதாகக் காணபபடுகின்றன. கதைகள், பாடல்கள், சில நிகழ்ச்சிகள் இவை உன் மனதில் இருந்துகொண்டு ஸ்வப்னத்தினடியில் காணப்படுகின்றன. இவற்றுடன் சில நடந்த நடக்கப்போகிற நடக்கிற சம்பவங்களும் கனவுகளில் காணப்படுகின்றன. புராணங்களிலும் தற்கால நிகழ்ச்சிகளிலும் இவைகளுக்கு அத்தாட்சியுள்ளன. இந்த வகைக்கதையில் பரதன் துஸ்வப்னங்கண்ட மறுநாள் தன் தகப்பனான தசரத மகாராஜர் இறந்த சம்பவத்தைக் கேட்கலானான். வருத்தத்துடன் கூடிய ஸீதாதேவியைத் தேற்றத் திரிஜடை தான்கண்ட ஸ்வப்னங்களை எடுத்துச்சொல்லி ஸீதையை தைரியப்படுத்தினாள். சிறுத்தொண்ட பக்தனின் குழந்தைசீராளன்பள்ளிக்கூடத்திலேயே தூக்க மேலிட்டு தூங்கும் சமயத்தில் கண்ட பயங்கரமான சொப்பனம் பின்னால் நடக்க வேண்டிய காலத்திற்கு அறிகுறியாக விருந்தது. ஸ்ரீ கிருஷ்ணனும் தமது பால்யத்தில் கனவு கண்டதாகச் சொல்லப்படுகிறது. இவை கதை கட்டுக்கதை, புராணக்கதை என்று தள்ளி விட்டாலும் இவைபோல் பின்னால் நிகழவிருக்கும் சம்பவங்களுக்கு அறிகுறிகள் கனவில் தோன்றி மறைகின்றன. சில பையன்கள் இதைப்பற்றின உதாரணங்கள் தந்திருக்கிறார்கள் பயத்துடன் கூடிய ஸ்வப்னங்களைக் கவனிக்கும் காலத்தில் இப்பயம் ஏற்பட்ட காரணம், குழந்தைகளின் மனோநிடம், தைரியம், கோழைத்தனம், நடுக்கம் இவைகளைக் கவனிக்க நேரிடுகிறது. பேத்தல் பிதற்றல், துக்கித்தல் எழுந்து உட்காருதல் விழித்துப்பார்த்தல், உளறுதல், கத்துதல், சிறுநீர்விட்டு உறங்குதல் போன்ற வெளிக்குறிகளைக் கொண்டு மன நிம்மதியில்லாமை; ஏதோ ஒன்றில் உள் நினைவு இருந்து கொண்டு வருந்துதல், கவலைகள், இவை வெளியாகும்.

பயங்கள்.

ஆண்டவனிடம் அச்சம் ஏற்படும் காலமே ஞானோதயத்திற்கு அறிகுறி என்பது ஒரு வேத வாக்கியம். அன்பு ஆனந்தம் அடக்கம், பக்தி இவற்றுடன் கடவுளை வழிபடுதலே சிறந்தது என்பதை நினைக்க வேண்டியிருக்க பயம் என்பதும் ஒரு பக்கம் வந்து தலை காட்டுகிறது. முனி சொன்ன மூன்றும் அளவுகடந்த ஞானிகளுக்கே பொருந்தும். பயம் என்பது சாமானிய ஜனங்களிடம் இயல்பாயமைந்த குணம. பரதன் என்பவன் இளம் பிராயத்தில் பயம் என்பதை அறியமாட்டானும். நெல்ஸனும் இளம்பிராயத்தில் பயம் என்றால் என்ன? என்று கேட்பானும். மார்க்கண்டன் யமனைக்கண்டாலும் அஞ்சவில்லை என்பவைகளெல்லாம் பொது ஜனங்களுக்கு ஏற்ற உதாரணங்கள். இளங்கன்று பயமறியாது என்ற பழமொழியும் உண்டு. ஏனெனினும் குழந்தைகளுக்கு சிற்சில விஷயங்களில் பயம் இருந்து கொண்டே இருக்கிறது. போலீஸ் காரனைக் கண்டால் சிலருக்குப் பயமுண்டு. ஒரு தடவை நான் தாலுக்காக் கச்சேரியைப் பார்த்துவர பிள்ளைகளை கூட்டிச்சென்ற பொழுதுஸப் ஜயில் பக்கத்திலிருந்தது. ஜயில் என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்தில் ஒருவன் வேண்டாம் வேண்டாம். நான் வரவில்லை என்றான். சிறு குழந்தைகள் பிச்சைக்காரர்கள், பல வித வேஷந்தரித்தவர்கள் இவர்களைப் பார்த்துப் பயப்படுவதுண்டு. சிறுவர்களின் இயற்கையான பயங்களை யறிய விரும்பி என் வகுப்புக் குழந்தைகளுக்கு ஒரு கால் கடிதம் கொடுத்து வீடு, பள்ளிக்கூடம், பகல் இரவு, உள்ளூர், வெளியூர் இவ்விடங்களில் அவர்களுக்கு பயம் உண்டாகும் சந்தர்ப்பங்களையும், பயத்தைத்தரும் விஷயங்களையும் எழுதித்தரச் சொன்னேன். அவர்கள் எழுதித் தந்தவைகளில் அடியிற் கண்டவை சில உதாரணங்கள் ஆகும். சில பயங்கரமான விஷயங்கள் கனவிலும் கருத்தைவிட்டு அதாவது ஸ்வப்பனத்திரையில் தோன்றி பயத்தை உண்டு பண்ணுகின்றன வென்று சொல்லுவது மிகையாகாது.

வீடு.

1. தனிமையாய் என்வீட்டு மாடிக்கு போவதென்றால் பயம்.
2. வீட்டில் சீக்கிரம் குளிக்காவிட்டால் அடிப்பார்களே என்ற பயம்.
3. வீட்டில் நாம் குழந்தைகளை அடித்து விட்டால் அடிப்பார்கள் என்ற பயம்.
4. வீட்டில் பணம் போய்விட்டது. அதற்கு நீதான் எடுத்து விட்டாய் என்று சொல்லும் பொழுது பயந்துவிட்டேன்.

பள்ளிக்கூடம்

1. பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயரைக் கண்டு பயப்படுவேன்.

2. நம் பள்ளிக்கூடத்தில் கூட ஸ்ட்ரைக் வருமென்று நான் பயந்தேன்.

3. பள்ளிக்கூடத்தில் மணி அடித்துவிடப் போகிறதே என்று பயப்பட்டேன்.

4. பள்ளியில் உபாத்தியாயரிடம் இங்கிலீஷ் ,பாட்டு ஒப்பிக்கும் பொழுது எனக்குப் பயம்.

பகல்

1. நான் பகலில் விடாமல் மழை பெய்வதைக் கண்டால் பயம்.

2. நான் பகலில் வாராவதியின்மேல் நின்றுகொண்டு அடையாரைப் பார்த்தால் எனக்கு பயம்.

3. நான் மேகக் கூட்டங்களையும் இடி முழக்கத்தையும் கேட்டு பயந்தேன்.

4. சிலர் பகலில் கூட திருடன் வருகிறான் என்று சொல்லுகிறார்கள், அதைக் கேட்டால் எனக்கு பயம்.

இரவு

1. இருட்டறைக்குள் பிசாசு இருக்குமென்று பயம்.

2. நடு இரவில் எல்லோரும் தூங்கும் பொழுது விழித்துக் கொண்டு எங்கு பார்த்தாலும் ஒரே இருளடைந்திருப்பதைப் பார்த்தால் பயம்.

3. இரவில் பூனை கத்துவதைக் கேட்டால் பயம்.

4. இரவு பயங்கரமான கனவைக் கண்டால் பயம்.

உள்ளூர்

1. வண்டி வரும்பொழுது குறுக்கே போனால் போலீஸ் காரர்கள் திட்டுவார்களோ என்று பயம்.

2. பைத்தியக் காரனைப் பார்த்தால் பயம்.

3. உள்ளூரில் தெருக்களில் விளக்குகள் அணைந்துவிட்டால் என்னசெய்வது என்றபயம்.

4. தெருவில் செல்லும்பொழுது மீசையும் தாடியுமாக ஒருவர் வந்தால் எனக்குப் பயம்.

வெளியூர்

1. வெளியூரில் தனியாய் ஒரு ரோடுக்குப் போனால் பயம்.

2. வழிதெரியாமல் தவறிவிட்டால் எனக்குப் பயம்.

3. வெளியூருக்கு ரெயில் போகும்பொழுது கீழே விழுந்து விடுவோமோ என்றபயம்.

4. வெளியூரில் போயிருந்து தண்ணீர் தங்கியிருக்கும் இடத்தைக் கண்டால் எனக்குப் பயம்.

உபாத்தியாயருடைய லக்ஷ்யகள்

தமது குழந்தைகளின் உண்மையான மனோபாவங்களை அறிவதே உபாத்தியாயரின் முதற்கடமை. அந்த அஸ்திவாரத்தின்மீதுதான் அவரது தமது போதனவிஷயங்களையும் முறைகளையும் பிரகாசிக்கச் செய்யவேண்டும். பயம் ஏற்படும் காரணங்களில் முதலாவது தன்னைத் தான் காப்பாற்றிக்கொள்ளப் பிரயத்தனப்படுவது என்ற மனித இயல்பு தான். தண்டனை என்பதைத் தடுக்கவும் பயம் ஏற்படுகிறது. மற்றும் தமது சக்தியில் நம்பிக்கைக்குறைவு, பெற்றோர்கள் மனோபாவம், மிகைப்படுத்துதல், ரகஸ்யம், சந்தேகம், கவலை இவைகளும் பயத்தைத் தூண்டுகின்றன. நமக்குச் சுயசக்தியில் நம்பிக்கை அவசியம். அதன் பொருட்டே சுயசக்தியுடன் விளங்கும் எல்லாக்குழந்தைகளுடைய சக்தியிலும் திடமான நம்பிக்கைவேண்டும். அப்பொழுதுதான் நாம் சிறந்த தோழனாகி அவர்களுடைய மனதைக் கவர்ந்து வசியம் செய்துகொள்ள முடியும். வேலை, விளையாட்டு, படிப்பு, ஒழிவு இவை கலந்துதான் தமது மாணுக்கர் வாழ்க்கையிருக்கவேண்டும். ஆத்மசோதனையில் எதிரொலியால் சிலவற்றை உபாத்தியாயரே கண்டறிய நேரிடும். மனிதன் தவறு செய்வது இயல்பு. ஆனால் ஒரு முறை தவறு செய்ததிலிருந்து அக்குறையை நிவர்த்திசெய்யப் போதுமான மனோதிடத்தை அடைந்து உன்னத லக்ஷியங்களை அடைய முயலுவதற்கு வழிதேடவேண்டும். சாம, தான, பேத, தண்டம் என்ற சதுர்வித உபாயங்களில் தண்டம் என்பது கடைசியானவழி. பொதுவாகப் பாலர்கல்வி சம்பந்தப்பட்ட வரையில் ஒழுங்கு, கண்டிப்பு இவை வேண்டியிருப்பினும் சிற்சில தேக இம்சையாகிற தண்டனைகள் விலக்கப்படமுடியும். பிரம்பின் உபயோகம், தலையில் குட்டுவது, கன்னத்தில் அறைவது, காதைத்திருகுவது, மணிக்கட்டில் குட்டுவது போன்றவைகள் ஒழியவேண்டும். சொல்மறக்காது. தேகவலி மறந்துபோம். சொல்லில்தான் வேகம், அன்பு, கட்டுப்பாடு, கண்டிப்பு அமைந்திருக்கிறது. சொல் ஒன்று. சொன்ன சொல்படி நடந்துகாட்டிப் பிறகு அதேபோல் செய்யச்சொல்வது பிரயோஜனத்தைத்தரும். சொல்தவறினும், செய்கைதவறினும, வருத்தம் கொடுக்க நேர்ந்திடினும் அச்சந்தர்ப்பங்களில் தமது மன வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்ளுதல் நலமே. நமது கஷ்டங்கள் குழந்தைகள்மீது பிரதிபலிக்கக்கூடாது. சக்திப் பெருக்குக்குத் தண்டனை ஒருபாதகம் ஆகுமோ என்னமோ? பயமானது சக்திப்பெருக்குக்கு ஒரு படியாகுமே தவிர தடை ஆகக்கூடாது என்றே தோற்றுகிறது. பயம் வேண்டும். அதனால் அதைரியம், கோழைத்தனம் உண்டாகிவிட்டால் வாழ்க்கை வீணாகிவிடும். பயத்திற்கும் ஒரு எல்லையுண்டு. அன்புப்பெருக்குக்கான

வழிகள் பலவுண்டு. அவற்றைக் கையாளுவதுதக்க பிரயோஜனத்தைத் தரும். காலைக் கூட்டங்களில் தைரியம் வெளிக்காட்டக்கூடிய பயத்தைத் தவிர்ப்பதைக் காட்டக்கூடிய கதைகள் சொல்வது பொருந்தும்.

பெற்றோர் கடமை

குழந்தைக் கல்வியில் உபாத்தியாயருக்கு எவ்வளவு பொறுப்பு இருக்கிறதோ அதற்குமேல் பெற்றோருக்குப் பொறுப்பு உண்டு. கண்மூடித்தனமான வாஞ்சையினால் பயம் உண்டாகிறது. "அங்கே போகாதே பூச்சாண்டி, இருட்டில் போகாதே பிசாசுவரும், சுவாமி கண்ணைக் குத்திவிடுவார்" இவை அளவுக்கு மிஞ்சின பயமுறுத்தல்கள். ஏழையின்மீது இரங்கி தம்மாலியன்ற பிச்சையிடுவது பயத்தைப்போக்கிப் பச்சாத்தாபத்தை உண்டுபண்ணும். முந்தினது வெறுக்கத் தக்கது. பின்னால் சொல்லப்பட்டது விரும்பத்தக்கது—சிலவை தீராது நேரிடினும் கூடியவரையில் அவற்றை மிகைப்படுத்தல் கூடாது. உதாரணமாக, மரணசம்பவங்கள், சண்டை சச்சரவுகள். தம்மால் முடியாத காரியத்தைச் செய்யச் சொல்வதும் விலக்கப்படவேண்டும். உதாரணமாக அஸ்திவாரப்படிப்பு நன்றாகயில்லாத ஒரு குழந்தையை வற்புறுத்தி மேல்வகுப்பில் படிக்கச் சொல்லுவது பயத்தை உண்டுபண்ணி சக்திப் பெருக்கில் தடையை ஏற்படுத்தும். பயங்கரமான கதைகளை இருட்டிலும் தூக்கநேரத்திலும் சொல்லுவதை நிறுத்தவேண்டும். அதிக தண்டனை சிலசமயம் நேர்விரோதமான முடிவில் முடியும். உபாத்தியாயரைப்பற்றி பயத்தையும் தண்டனையையும் விஸ்தரிப்பதை நிறுத்தி சன்மார்க்க போதனை, நீதி, ஒழுங்கு சதாசாரம் இவற்றில் போதனை செய்வது நல்லது. உபாத்தியாயருடைய வாழ்க்கையானது பாபமாகிற பெருமூட்டையை நீங்கி, அதற்குப் பரிகாரமாகிற பிராயசித்தத்திற்கு வழிதேட ஏற்பட்ட ஒரு நல்வழியாகவே உணர்ந்து அவரை நல்வழியில் இறங்கவிட சமூகமே ஒரு வழிகாட்டியா யிருக்கவேண்டும். பிள்ளைகள் அவரிடம் பயத்தைக்காட்டிலும் பக்தியைக் காட்டுவது உயர்ந்த தர்மம். உண்மை, சுத்தம், பக்தி, பிரகாசம், அழகு, சாந்தம், இயற்கையழகுள்ள இடங்களுக்குக் குழந்தைகளை அழைத்துச்செல்வது மேல்.

பிதாக்கள் ஐவரில் பயத்தைப் போக்குகிறவர் ஒருவர்

பிறவிக்குக் காரணமானவர் உபநயனம் செய்வித்தவர், குரு, அன்னமளிப்பவர், பயத்தைப் போக்குகிறவர் இந்த ஐவரும் பிதாக்களுக்குச் சமானமாவர். பிதாக்களே என்றும் சொல்லாம். சமூக வாழ்க்கையில் பல நிர்ப்பந்தங்களில் பிள்ளைகள் வளர்ந்துவரநேரிடுகிறது. பலவித தொல்லைகளில் அகப்பட்டுத்தவிக்கிற குடும்பங்களிலுள்ள குழந்தைகள் சிலர் மிகுந்த பயம், தண்டனைக்கும் உள்ளாகிறார்கள். இவற்றைத் தவிர்ப்பது சமூகக் கடமையாகும். இந்த யுத்தகாலத்தில் மேல் நாடுகளில் பொது ஜனங்கள் சண்டையைப்பற்றின கொடுமைகளை

அறியக்கூட பொழுதிருக்காதபடி அவர்கள் கவனத்தை உபயோகமான இன்பமான பல வழிகளில் செலுத்தக்கூடியபடி நாடகங்கள், விளையாட்டுகள், போட்டிப் பந்தயங்கள் ஏற்பாடு செய்ய சுமார் 2000 சங்கங்கள் கிளம்பியிருக்கின்றனவென்று ஒருவர் சொல்லக் கேட்டது உற்சாகத்தை யளிக்கிறது. கொடூரமான காரியங்கள் முறட்டுத்தனத்தை உண்டு பண்ணும். "கோழிக் கழுத்தைத்திருகுவதைப் போல் திருகி விடுவேன்" என்று சொன்னாலும் அது ஒரு சாதாரண சம்பவம் என்று நினைத்தாலும் மனோபாவம் எப்படி பச்சாத்தாபத்திற்கு இடங் கொடுக்கும்!

உண்மைக்கும் சுய சக்திப் பிரகாசத்திற்கும் மதிப்பு உண்டு.

உண்மையைச் சொன்னால் தண்டனை நேரிடுமே என்று நினைக்க நேரிடும்போது உண்மை வெளிவருகிறதில்லை. உண்மைக்குத் தண்டனை இல்லாமல் மன்னிப்பை யளிப்பதும். மனதை மாற்ற முயற்சியெடுப்பதும் பொருத்தமாகும். சின்னஞ் சிறுவர் செய்யும் சிறு வேலையைப் பெரியோர் ஆரம்பத்திலேயே குறைகூறித் தள்ளிவிடாமல் அதைச் சிறப்பிக்கத்தக்க யோஜனைகளைச் சொல்லுவதுமன்றி அத்திட்டத்தின்படி மாற்றியமைக்க சில ஏற்பாடுகளை அமைத்துக் கொடுக்கவேண்டும். கவலையில் ஆழ்ந்த மனம், தானாகை பயந்த சுபாவமுள்ள மனம், பிறவிப் பயமுண்டு பண்ணப்பட்ட மனம் உடையவர்கள் வெளிப்படையாக நிஜத்தைச் சொல்ல முன் வரார். கவலை, பயம் ஒழிந்தால்தான் உண்மை வெளிவரும். பயத்தைப் போக்குவதில் உபாத்தியாயருக்குப் பங்குண்டு. உபாத்தியாயர் பெற்றோர் கூட்டுறவும் இதற்கு அவசியம். "குழந்தைகளுடனிருந்து குழந்தைகளுக்காக ஜீவிப்போம்" என்ற கோட்டை லக்ஷியமாயுள்ளவர்கள் தம்மாலானதைச் செய்தே வருவார்கள். அவர்களுக்குக் குழந்தைகளின் சக்திப்பெருக்கில் நம்பிக்கையுண்டு. அவர்களே பயததைப் போக்கும் வழிகளைச் சிந்தித்துப் பிறருக்கும் வழிகாட்டியாயிருப்பார்கள். இப்பேர்ப்பட்டவர்கள் உபாத்திமைத் தொழிலன்றி மற்ற எத்துறையில் சேவை செய்தபோதிலும் குழந்தைகளின் க்ஷேமத்தை உத்தேசித்து பற்பல வழிகளில் சிந்திப்பார்கள். ஆயினும் உபாத்தியாயர்களே முதன்மையான பொறுப்பாளிகள்.

இங்கு பார்க்கப்படும் படத்தின் அச்சு கலைமகள் ஆபிஸால் அன்புடன் அளிக்கப்பட்டது, இக்கட்டுரை சம்பந்தமான சில விவரங்களை 1941 பிப்ரவரி கலைமகள் பத்திரிகையிலும் காணமுடியும். S. J.

தாய்மொழி கற்பித்தல்

M. Subramaniam, *L. M. C. High School, Shiyali.*

III. தமிழ் ஒலி முறை (Phonetic System)

உச்சரிப்பின் முக்கியம்.

எந்த மொழி பயிற்சியிலும் உச்சரிப்பு மிகவும் முக்கியமாக இருக்கிறது மாணவர்கள தங்கள் தாய்மொழியாகிய தமிழைப் பிழையற எழுதவும், பேசவும் வேண்டுமானல், தமிழ் எழுத்துக்களின் உச்சரிப்பை முதலில் இருந்து திருத்தமாகக் கவனித்துக் கொள்ளவேண்டும்.

ஒலியில் பிசகு உண்டானல் எழுத்திலும் பிழை ஏற்படும்.

வரிவெழுத்து முறை வழங்குவதற்குமுன் ஒலி எழுத்தையே ஆசிரியர்கள் கையாண்டியதாகத் தெரியவருகிறது. ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களுக்கு வாய் மூலமாகப் பாடங்களைக் கற்றுக் கொடுத்த காலமும் உண்டு. வேதம், சங்கீதம் முதலியவற்றை ஆசிரியர் வாய்ப்பட சிலர் கற்பதன் நோக்கம், அவற்றின் ஓசை நுட்பங்களை அவர்கள் காதால் நன்ருகக் கேட்டு, தங்கள் மனத்தில் வைத்துக்கொள்ளும் பொருட்டேயாகும். தற்போது தெருப் பள்ளிக்கூடங்களிலும் இவ்வாறே முதன் முதல் ஆசிரியர் பாடம் சொல்ல பின்பு மாணுக்கர்கள் சொல்கின்ருர்கள். பின்பு மாணுக்கர்கள் ஆசான் சொன்னபடி உச்சரித்து மணலிலும், கற்பலகைகளிலும், பிறவற்றிலும எழுதுகின்ருர்கள்.

இலக்கண நூல் என்ன சொல்கின்றது.

இலக்கண நூற்களை நாம் கவனித்துப் பார்த்தால் அவற்றிலும் முதன் முதலில் ஒலி எழுத்துக்களைப் பற்றியே காண்கிருேம். தொல்காப்பியரும் வரிவெழுத்தை முதல் உணர்த்தாது ஒலி எழுத்தினையே குறிக்கின்றனர். உதாரணமாக அவர்

அவற்றுள்
அ, இ, உ,
எ ஒ வென்னுமப் பாலைந்தும்,
ஓரள பிசைக்கும் குற்றெழுத்தென்ப *என்றும்,*
ஆ, ஈ; ஊ, ஏ ஐ,
ஓ ஔ வென்னுமப்பாலேழும்,

ஈரள பிசைக்கும்—*நெட்டெழுத்தென்ப, என்றும், கூறுகின்றனர்.* "ஓரளபு", "ஈரளபு" *என்னும் போது எழுத்துக்களின்* ஒலியையே

காட்டுகின்றது. மேலும் குறுகிய ஓசை உடையதும் ஒரு மாத்திரை ஒலிக்கக்கூடியதுமான எழுத்துக்கள் குற்றெழுத்தாகும். நீண்டு இரண்டு மாத்திரை ஒலிக்கக்கூடியது நெட்டெழுத்து. வல்லோசை உடையது வல்லினமாகும். மென்மையாக நாசியின் மூலமாய் உச்சரிக்கக் கூடியது மெல்லினம். இப்படியே ஒலியின் தன்மையை வகுத்து எழுத்துங்களுக்கு இலக்கண நூலார் பெயரிட்டனர்.

"மொழி முதற் காரணமாம் அணு திரள் ஒலி" என்று நன்னூலாரும் கூறியுள்ளார். இதனுல் எழுத்துக்கள் முதன் முதல் ஒலியையே ஆதாரமாக் கொண்டுள்ளன என்று புலப்படுகிறது. அன்றியும் ஒலியும் உச்சரிப்பும் மாறின், சொல்லும், பொருளும் மாறும்." "அறம்" "கலை" என்பதை "அரம்" "கலை" என்று உச்சரித்தால் பொருள் எவ்வளவு வித்தியாசப் படுகிறது. எனவே, மொழி ஆசிரியரின் முதல் லக்ஷியம் உச்சரிப்பேயாகும்.

தமிழ் எழுத்துக்களும் ஒலியும் :

வடமொழி எழுத்துக்கள் ஒலி நிறைந்தவை என்பர் புலவர் தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய மொழிகள் வடமொழி உச்சரிப்பையும், எழுத்துக்களையும் பெரும்பாலும் கொண்டுள்ளன. ஒவ்வொரு ஒலிக்கும் ஒவ்வொரு எழுத்து இருத்தலே சரியாதலால், தமிழில் இருக்கும் நாற்பது ஒலிக்குமுப்பத்தோரு எழுத்துக்களே இருக்கின்றன. மீதி ஒன்பது ஒலியும் வல்லின இடபேதங்களால் உண்டாகிறது. உயிர் பன்னிரண்டும், மெய் பதினெட்டும், ஆய்தம் ஒன்றுமே தமிழில் உள்ளன. தமிழில் கூட்டெழுத்து அல்லது "சந்தியக்கரம்" இல்லாமையால் கூட்டொலியும் கிடையாது. ஐகாரமானது அகரமும் இகரமும் சேர்ந்தது என்றும், ஔகாரமானது, அகர உகரமும் சேர்ந்தது என்றும் தொல்காப்பியர் கூறி இருக்கிறுர். வேறு எந்த மொழியிலும் இல்லாத சிறப்பு தமிழ் மொழிக்கு "ற—ழ—ன." என்னும் எழுத்துக்களால் உண்டு. மெல்லினத்திற்குப் பின் அடுத்துவருங் வல்லின எழுத்துக்கள் தாமும் மேல்லோசை அடைகின்றன. வல்லினமாகிய க—ச—ட—த—ப என்னும் எழுத்துக்களுக்கு தம் ஓசை தவிர பிற ஓசையும் உண்டு. அகம். சங்கம். கருமான் முதலிய சொற்களில் "க" மூன்று ஒலிகள் தனித் தனியே உடையது. அஞ்சல், பைசல், கடன்—கண்டம், தழை—விதம், பழம்—கம்பம், முதலிய சொற்களில், ச—ட—த—பக் களின் ஓசை வித்தியாசப் படுகின்றன.

ஒரு விசேஷம் :

தமிழ் எழுத்துக்களில் ஒலி சம்பந்தமான விசேஷம் மற்றொன்று உள்ளது. குற்றியல் உகரம்—முற்றியலுகரம், முற்றியலிகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், போலி, முதலியன, சுலபமா உச்சரிக்கும்

பொருட்டு, ஒலி குறைந்தும் மாறியும் நிறைந்தும், வருகின்றன. அன்றியும் ஒரு சொல்லில் ஒலிக்க வேண்டிய எழுத்துக்கள் சிலவற்றை வேண்டிய போது உயர்த்தியும், சிலவற்றைத் தாழ்த்தியும், மற்றும் சிலவற்றை நடுத்தரமாகவும், உச்சரிக்கலாம். எழுத்திற்கு உரிய ஒலி, சில இடபேதத்தால் மாறும் என்பதைக் குறிக்க.

"எடுத்தல் படுத்தல், நலித்தல், உழைப்பின்,
திரிபும் தத்தமில், சிறிது உளது ஆகும்.

என்று நன்னூலும் கூறுகிறது. மேலும், தமிழில் ஒலிக்கருவிகளுக்குக் கஷ்டம் உண்டாக்காமல் இருப்பதற்கும், சிக்கனத்தின் பொருட்டும், "தோன்றல்" "திரிதல்," "கெடுதல்" "மாறுதல்" முதலிய எழுத்துப் புணர்ச்சிகளும், சாரியையும் இடைநிலைகளும் ஏற்பட்டன போலும். தெங்கு + அம் + காய் = தேங்காய். மரம் + வெட்டினான் = மரத்தை வெட்டினான். சதை = தசை, முதலிய சொற்களில், ஓர் இன ஒலி குறைதலும், "அத்து" என்றுதோன்றலும் தசையில், ஒலி மாறுதலும், உண்டு. வடமொழி எழுத்துக்கள் தமிழில் வரும்போது தற்பவம் தற்சமம் என்னும் முறையில் வருகின்றன. இத்தகைய ஒலித்தன்மையை கவனித்தால் தமிழில் பிறமொழி ஒலிகளையும் மாற்றிக்கொண்டு வரக்கூடும் என்று புலப்படுகிறது.

ஒலிப் பிழைக்குக் காரணம்.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட சிறுவர்களுக்குச் சிறுவயதில் தாய்மொழி ஒலியைப் பழக்குவித்தலுக்குப் பதிலாக, ஆங்கிலம், ஹிந்தி, தெலுங்கு முதலிய வற்றைப் பழக்குவித்தலால் தமிழ் ஒலி முறைக்குப் பிழை உண்டாகும். வடுகன் தமிழும், தமிழன் பேசும் தெலுங்கும், ஐரோப்பியன் தமிழும், இந்தியர் பேசும் ஆங்கிலமும் உச்சரிப்பு முறைப்பிரகாரம் வித்தியாசப்படும். இருமொழி பழக்கத்தால் உச்சரிப்பு சிலசமயங்களில் தவறுக இருக்கலாம். எனவே, திருத்தமான உச்சரிப்பு நெடுங்காலம் நிலைத்திருக்க சிறுவயதிலேயே குழந்தைகளுக்குத் தாய்மொழி ஒலியையும் உச்சரிப்பையும் பழக்குவிக்க வேண்டும். இனி எழுத்துக் கருவிகளையும், ஒலிபிறக்கும் இடத்தினையும் உச்சரிக்க வேண்டிய முயற்சியையும் கவனிப்போம்.

ஒலி முறையும் — எழுத்துக் கருவியும் :

நாம் சாதாரணமாக மூச்சை வெளி விடுகின்றோம். இப்படி விடும் காலத்தில் காற்று நுரை ஈரல் இரண்டிலிருந்தும் கிளம்பி தொண்டை வழியாக மூக்கிற்குப்போய் வெளியாகின்றது. சில சமயங்களில் வாயின் வழியாகவும் செல்லக்கூடும். இதை விளக்கிக்காட்ட ஆசிரியர் தொல்காப்பியர் வெகு அழகாய் எழுத்ததிகாரத்தில்,

"உந்தி முதலாம் முந்து வளி தோன்றித்
தலையினும், மிடற்றினும் நெஞ்சினும், நிலைஇப்,
பல்லும், இதழும், நாவும், மூக்கும்
அண்ணமும் முளப்பட எண்முறை நிலையால்
உறுப்பு உற்று அமைய நெறிப்பட நாடி
எல்லா எழுத்தும் சொல்லும் காலைப்
பிறப்பின் ஆக்கம்................ என்று கூறியுள்ளார்.

[உந்தி=கொப்பூழ் அல்லது தொப்புள். வளி=காற்று. அண்ணம்=மேல் வாய்.] உந்தியிலிருந்து அடியாக மேலே உதானன் என்னும் ஒரு வாயுத் தோன்றி, அது தலை, மிடறு, நெஞ்சு, பல், இதழ், நா, மூக்கு, அண்ணம், முதலியவற்றில் நிலைபெற்று வெவ்வேறு எழுத்துக்களாக ஒலிக்கின்றது என்பது தொல்காப்பியரின் கருத்து. ஆனால் பவணந்தி முனிவர், தொப்புளைக் குறிக்காமல், உடலின் உள் இருக்கும் காற்று எழும்ப என்பதைக் காட்ட "உள்வளி துரப்ப" என்றார். எனவே தொண்டைக் குழி, குரல் வளை, ஒலி நரம்புகள், உள் நாக்கு, அண்ணம், நா, பற்கள், உதடுகள், மூக்கு முதலியனவே எழுத்துக்களுக்குக் காரணமாக இருக்கும் கருவிகளாகும். இனி இக்கருவிகளின் மூலமாகச் செல்லும் "உள் வளி" எந்த இடத்தில் எவ்வித முயற்சியால் எத்தன்மையான ஒலி எழுத்துக்களாக மாறுகின்றது.

தமிழ் எழுத்துகளின் பிறப்பிடம்:

தமிழ் எழுத்துக்களின் பிறப்பிடமும் ஒலித்தன்மையும் மிக அழகானவை. உயிர் பன்னிரண்டும் இடையின எழுத்துக்களாகிய ய, ர, ல, வ, ழ, ளவும், கழுத்தில் உள்ள தொண்டைக்குழியை இடமாகக் கொண்டு பிறக்கும். மெல்லினமாகிய, ங, ஞ, ண, ந, ம, ன என்பவை மூக்கை இடமாகக் கொண்டு சிறிது வாய் திறந்தும் சிறிது மூடியும் ஒலிக்கும். வல்லினமாகிய, க—ச, ட—த, ப—ற என்பவைமார்பை இடமாகக் கொண்டு மூக்கு ஒலி இல்லாமல் உச்சரிக்கப்படும். அ—ஆ, வாய்திறத்தலாலும், இ, ஈ; எ, ஏ, ஐ, என்னும் ஐந்து எழுத்துக்களும், வாய்திறத்தலுடனே மேல்வாய்ப் பற்களுக்கும் பின் உள்ள அண்ணத்தில் அடி நாக்கினது ஓரமானது பொருந்த ஒலிக்கும். உ—ஊ—ஒ—ஓ—ஔ என்பன வாய் திறத்தலுடன் உதடுகளையும் குவித்து ஒலிக்க பிறக்கும், அடி நா, மேல் வாய் அடியில் பொருந்துதலால் க—ஙவும், மேல்வாய்நடுவில் (இடையில்) இடை நா பொருந்துததால் ச-ஞ வும், மேல் வாய் நுனியில் நுனி நா பொருந்துதலால் ட ணவும் பிறக்கும். மேல் வாய் பற்களின் அடி இடத்தை, நாக்கு நுனி பரந்து நின்று, தான் அதனோடு ஒன்று படுமாறு ஒற்ற, த—நவும், மேல் உதடும் கீழ் உதடும் தம்மில் பொருந்த ப—ம வும், நாக்கின் அடிமேல் வாய் அடியைப் பொருந்த ய வும் பிறக்கும்.

பிழையான உச்சரிப்பு எங்கே உண்டாகின்றது.

தமிழில் இருக்கும் ந—ன—ண, ல—ள—ழ, ர—ற என்னும் எழுத்துக்களைச்சரியானபடி உச்சரிக்காததனால், பொதுவாகப் பிள்ளைகள் எழுதும் போது பிழை செய்கின்றார்கள். இவ்வெழுத்துக்களின் பிறப்பிடத்தையும், உச்சரிப்பையும், கவனிப்பதோடு, இன எழுத்துக்களையும் கவனித்தால் தவறு இல்லாமல் எழுதக்கூடும். த வுக்கு ந வும், ட வுக்கு ண வும் ற வுக்கு ன வும், இனமாகும். தந்தேன், சண்டாளன், கன்று முதலிய சொற்களில் வரும் ந—ண—ன—எப்போதும் த—ட—ற, என்னும் எழுத்துக்களோடு தான் வரும். உச்சரிப்பை அழகு படுத்தவும் ஒலிக்கருவியை சுலபமாக்கவுமே இவ்வாறு இன வெழுத்துக்கள் தமிழில் அமைந்துள்ளன.

ஆங்கிலத்தில் Q என்னும் எழுத்துடன் எப்போதும் U வரும். R என்பதோடு ஒரு உயிரெழுத்து முன்னாகிலும் பின்னாகிலும் வரும், த—என்பதன் ஒலி மூக்கின் மூலமாக வந்தால் 'ந'' வாகிறது. ரகர றகரங்களைச் சாதாரணமாக உச்சரித்துப் பார்க்கும்போது ஒரே விதமான ஓசையுடைய எழுத்துக்களைப்போல் தோன்றுகின்றன. ஆயினும் இவ்விரண்டுக்கும் வித்தியாசம் உண்டு.

நாவின் நுனிமேற் சென்று அண்ணத்தைத் தடவரகரமும், ழகரமும் பிறக்கும் என்று தொல்காப்பியர் கூறுகிறார் மேலும் ரகரம் இடையினத்தையும், றகரம் வல்லினத்தையும் சேர்ந்ததாகையால் பிறப்பிடங்களும் வித்தியாசமானவை.

"அண்ணம் நுனிநா நனி உறில் றனவரும்" என்று நன்னூலார் கூறும்போது, றகரத்தைச் சற்று அழுத்தி வன்மையாகவே உச்சரிக்க வேண்டும். ல, ள, ழ என்னும் எழுத்துக்களைச் சிலர் சரியாக உச்சரிக்காமல், பழம் என்பதைப் பளம் என்றும், உளுந்து என்பதை உழுந்து என்றும் சொல்கிறார்கள். இது போலியாகினும், பிழையான உச்சரிப்பேயாகும். இப்பிழைகளை நீக்க, எழுத்துக்களின் சரியான பிறப்பிடத்தை அறிந்து உச்சரிக்க வேண்டும். ஒவ்வொரு எழுத்தும் எந்த இன வெழுத்தைச் சேர்ந்தது என்பதையும் அறிந்துகொள்ள வேண்டும். இவ்வெழுத்துக்கள் வரும் சொற்களின் பொருளையும் கவனிக்கவேண்டும். களி, கழி, கலி, கரை, கறை, கனம், கணம் முதலிய சொற்கள் உச்சரிப்பிலும், பொருளிலும் வேறுபடுகின்றன. அன்றியும், தமிழ் எழுத்துக்களில், சில மொழிக்கு முன்னும், சில மொழிக்கு இறுதியிலும், சில இனத்தோடு சேர்ந்தும் வரும். இவற்றை ஆசிரியர் நுட்பமாகக் கவனிக்கவேண்டும். பொதுவாக எழுத்துப் பிழைகளை நீக்க எழுதுவதே தகுந்த வழி.

மாணவர்களின் உச்சரிப்பை—விருத்தியாக்குவது எப்படி ?

தாய்மொழி கற்பித்தல் ஒரு பொறுப்பான வேலை. அம்மொழியில் பேசும் திறமை சரியான உச்சரிப்பையே அடிப்படையாகக் கொள்ளும். சரியான உச்சரிப்பு சிறுவர்களுக்கு அமையும் காலம் இளமைப் பருவமே. ஆகையால் இளமைப் பருவத்தில் பாலர்களுடைய உச்சரிப்பைக் கவனிக்கவேண்டும். இதற்கு ஆசிரியரின் உச்சரிப்பே முன் மாதிரி. ஆசிரியர் அழகாகவும், சுத்தமாகவும், உச்சரிக்கவேண்டும். அவர் ஒலி நுட்பங்களையும், ஒலி பிறக்கும் இடங்களையும் ஒலிக்கருவிகளையும் பற்றிய அறிவுள்ளவராகவும் இருக்கவேண்டும். மொழிதிருத்தம் அனுகாணசக்தியினல் (Imitation) அதிகமாகிறது. ஆசிரியர் எவ்வாறு சொல்கின்ருரோ அவ்வாறே பிள்ளைகளும் அவரைப் பின்பற்றுகின்றனர். மாணவர்களுக்கு சுவாசித்தல் பயிற்சியும், நா, உதடு முதலிய உறுப்புக்களை திருத்தமான முறையில் உபயோகிக்கும் பயிற்சியும் ஆசிரியர் தரவேண்டும். பிழையான உச்சரிப்பைக் கேட்டவுடன் ஆசிரியர் பிழை செய்தவனைத் தனியே தன்னிடம் அழைத்து, அவனுக்குத் தக்க உச்சரிப்பு அப்பியாசங்களைத் தரவேண்டும். ல, ள, ழ, ற, ர, ண, ன முதலிய எழுத்துக்கள் வரும் சொற்களை முதலிலிருந்தே வெகு ஜாக்கிரதையாக உச்சரிக்கச் செய்யவேண்டும். வல்லினம் இரட்டிக்கிற இடங்களில் ஆசிரியர் சொல்வதோடு நில்லாமல், எழுதியும் காட்டவேண்டும். பிள்ளைகளை எழுதவும் செய்யவேண்டும். ஒலிவடிவமும், வரிவடிவமும் மனத்தில் பதிந்துவிட்டால் எழுத்துப் பிழை உண்டாகாது. இக்காரணங்களைக் கொண்டே தெருப் பள்ளிக்கூடங்களில் தற்போதும், மாலை நேரத்தில் ஒவ்வொரு பிள்ளையும் வாய்பாடு செய்யுள் முதலியவற்றைச் சொல்ல மற்றவர்கள் பின் சொல்கிருர்கள். சொன்னதை அடுத்தநாள் எழுதியும் காட்டுகிருர்கள்.

ஆத்திச்சூடி—கொன்றைவேந்தன்.

ஒலி முறைப்பிரகாரம் குழந்தைகள் திருத்தமாக உச்சரிக்கவும், சுலபமாகச் சொல்லவும் ஒளவையார் தமது ஆத்திச்சூடி கொன்றைவேந்தன் என்னும் நூலை பொருளோடு எழுதி உள்ளார். தமிழ் நெடுங்கணக்குப் பிரகாரம் இந்நூற்களை வகுத்துள்ளார். இதனுல் உயிர், மெய், உயிர்மெய் முதலியவற்றின் ஒலி நுட்பங்களும், உச்சரிப்பும் பிள்ளைகளின் மனத்தில் தெளிவாகப் பதிந்து விடுகின்றன. பின்பு எழுத்துக்களின் இன முறைப்பிரகாரமும், ஓசைப் பிரகாரமும், எழுதியுள்ளார். எதுகை மோனை வேண்டிய இடங்களில் அமைத்து, ஒலிக்கருவியைப் பலப்படுத்தவும் திருத்தமாக உச்சரிக்கவும், இந்த நூற்களைச் செய்துள்ளார். உதாரணமாக, ஆத்திச்சூடியில்,

இடம்பட வீடிடேல்.
இயல்பலாதன செயேல்.

தந்தை தாய்ப்பேண்.
அனந்தலாடேல்.
சொற் சோர்வுபடேல்.
பழிப்பன பகரேல் :—*என்பவற்றையும் கொன்றை வேந்தனில்,*
இல்லறம் அல்லது—நல்லறம் அன்று
கற்பனைப் பலவேது—சொற்றிறம் பாமை,
கிட்டாதாயின்—வெட்டன மற,
கேட்டில் உறுதி கூட்டும் உடைமை,
புலையும் கொலையும், களவும் தவிர்,
முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்,
மோனம் என்பது, ஞான வரம்பு,

வெள்ளைக் கில்லை கள்ளச்சிந்தை, *என்பவற்றிலும் வெகு அழகாக* ட, ன, ற, ல, ள, ர *முதலிய எழுத்துக்களின் ஒலியை அமைத்துள்ளார். ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு அவசியம் ஆத்திச்சூடி கொன்றை வேந்தன் ஆகிய இவற்றைக் கற்பிக்கவேண்டும்.*

பாடசாலைகளும் சுகாதாரமும்*

By **G. L. LOBO**, *Divisional Inspector of Schools, Madura.*

இவ்வித விஷயத்தைப்பற்றி உபந்நியாசிப்பது, சுகாதார இலாகா உத்தியோகஸ்தர்களுக்கு மொத்தப் பொருத்தமாயிருக்குமே யொழிய, கல்வி இலாகா உத்தியோகஸ்தர்களுக்கு, அவ்வளவு பொருத்தமாயிருக்க மாட்டாது. ஆனால் இத்தேசத்தில் சுகாதார இலாகா, கிராமப்பாடசாலைகளுடன் சம்பந்தப்படக்கூடிய ஏதுவில்லாதிருக்கிறது. ஆகையால் நான் சில குறிப்புகளைக் கூற முயற்சிப்பேன். ஆனால் அங்ஙனம் கூறு முன் என்சொந்த இலாகா விஷயமாய், அதாவது கல்வி அறிவைப்பற்றி சிலவார்த்தைகள் பேசும்படி, இச்சந்தர்ப்பத்தை எடுத்துக்கொள்ள ஆசிக்கிறேன். சர்க்கார், ஸ்தலபஞ்சாயத்தார், மானேஜ்மெண்டார் ஆகிய இவர்கள், பள்ளிக்கூடம் போகக்கூடிய வயதுள்ள பிள்ளைகளுக்கு, இலவசக்கல்வி யளிக்கும்படியாக, பற்பல இடங்களில் பாடசாலைகள் திறக்கும் பொருட்டு முயற்சித்து வருகிறார்கள். ஆனால் கிராமத்தார்களின் ஒத்துழைப்பு இல்லாமையினால் அவைகள் தளர்ந்து போகின்றன. பெற்றோரின் ஒத்துழைப்பு இல்லாத எந்தப் பள்ளிக்கூடமும் சித்தியாய் நடைபெறமுடியாது. பள்ளிக்கூடங்களில் அதிகமதிகமான பிள்ளைகளைச் சேர்க்கும்படி ஆசிரியர்கள் முயற்சிக்கிறார்கள். ஆனால் பெற்றோர் பிள்ளைகளை அனுப்பாதபடி, பல சாக்குப்போக்குகளைச் சொல்லுகிறார்கள். கிராமத்தார்களின் வீட்டுக் கஷ்டங்களை நான் நன்கறிவேன். பள்ளிக்கூடத்தில் படிக்கவேண்டிய பிள்ளைகளில் சிலர், சிறு குழந்தைகளைக் கவனிக்கவும், ஆடுமாடுகளை மேய்க்கவும், வயல்களில் வேலைசெய்யும் பொருட்டும் வீடுகளில் நிறுத்திக் கொள்ளப் படுகிறார்கள். இவ்விதக் கஷ்டங்களைக் குறைவுபடுத்த நான் விரும்புகிறதில்லை. ஆனால் கூடிய மட்டும் இவ்வித தடைகளை மேற்கொண்டு, பள்ளிக்கூடங்களுக்கு உங்களால் எத்தனை பிள்ளைகள் அனுப்பப்படக்கூடுமோ, அத்தனை பிள்ளைகளையும் அனுப்புவிக்கும்படி பிரயாசப்பட நான் உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

பள்ளிக்கூடத்துக்குப் பிள்ளைகளை அனுப்புவதால் என்னலாபம் உண்டாகுமென நீங்கள் என்னைக் கேட்கலாம். பிள்ளைகள் பள்ளிக்கூடங்களுக்குப் போனவுடனே ரூபாய், அணா பைசா வரும்படியாவது, அல்லது ஐந்தாம்வகுப்பு தேறி முடிந்தவுடனே, ஏதாவது உத்தியோகமாவது அவர்களுக்குக் கிடைக்கவேண்டுமென்று நீங்கள் கருதினால், அவ்விதமான லாபம் உங்களுக்கு ஒன்றும் கிடைக்காதென நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், ஒவ்வொரு பிரஜைக்கும், கல்வியறிவு எவ்வ

ளவோ அவசியமென நீங்கள் சிந்தித்து உணரவேண்டும். கல்வி அறிவு இல்லாத ஓர் ஆள், மற்ற நாடுகளில் என்ன நடக்கிறதென்பதை அறியக் கூடாதவனுயிருப்பதுடன், தன் சொந்த நாட்டில், மாகாணத்தில் ஜில்லாவில்கூட என்ன நடக்கிறதென்பதை தன் அறிவீனத்தினிமித்தம் தெரிந்து கொள்ளக் கூடாதவனுயிருக்கிறுன். தன் சினேசிதனிடமிருந்தாவது அல்லது தன் இனத்தானிடமிருந்தாவது வரும் ஓர் கடிதத்தைத் தானுக வாசிக்கக் கூடாதவனுயும், அதற்குப் பதில் தானுக எழுத முடியாதவனுயுமிருக்கிறுன். அவன் தன் சொந்த வரவு செலவு கணக்குகளையும் வைக்க இயலாதவனுயிருப்பதின் பலனுக, தன்னுடைய தினசரிக் கூலி வரும்படியிலும், கடன்களுக்கு ஏற்பட்ட வட்டிக்கணக்கிலும், மற்றவர்களால் ஏமாற்றப்பட்டு, நஷ்ட மடைகிறவனு யிருக்கிறுன். முனிசிபாலிட்டிகள், லோக்கல் போர்டுகள், சட்ட சபைகள் இவைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய நமது பிரதிநிதிகள், கல்வி அறிவு உள்ளவர்களாலேயே தெரிந்தெடுக்கப்படவேண்டும். கல்வி இல்லாமையினுல் சங்கங்களுக்குரிய உரிமையை சர்க்காரிடமிருந்து, நீங்களே இழக்கக் கூடியவர்களாயிருக்கிறீர்கள். இந்தியாவின் வருங்கால பிரஜைகள் உங்கள் பிள்ளைகளே. உங்களில் கல்வி அறிவு இல்லாதவர்கள் எவ்வளவோ கஷ்ட நஷ்டங்களை அடைந்திருக்கிறுர்கள். பிரஜைகளாக உங்கள் உரிமைகளை அனுபவிக்கவும், அப்பியாசிக்கவும் இயலாமலிருக்கிறீர்கள். ஆனுல் நமது தேசத்தின் நன்மையினிமித்தம், உங்கள் பிள்ளைகள் பெரியவர்களாகி சிறந்த பிரஜைகளாகும் உரிமையை அவர்களிடமிருந்து நீங்களே எடுத்து விடாதிருங்கள். ஐரோப்பிய தேசங்களில் பிள்ளைகள் எல்லாரும் கல்வி அறிவு உள்ளவர்களாயிருக்கிறுர்கள். ஆனுல் நமது நாட்டிலோ பள்ளிக் கூடத்துக்குப் போகவேண்டிய வயதுள்ள பிள்ளைகளில் வெகு சொற்பப்பேர்கள் தான் பள்ளிக்குபபோகிறுர்கள். ஆகையால் உங்கள் பிள்ளைகளில் அனேகரைப் பாடசாலைகளுக்கு அனுப்பும்படி உங்களைத் தாபந்தமாய் வேண்டிக்கொள்ளுகிறேன்.

பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்பின பின் அவர்கள் கல்வி அறிவில் தேறுமட்டும் அதாவது ஐந்தாம் வகுப்பு தேறுமட்டும் நிறுத்திவிடாமல் அனுப்பிக்கொண்டேயிருங்கள். ஐந்தாம் வகுப்பு முடிக்குமுன் பிள்ளைகள் நின்று கொண்டால், அவர்கள் கல்வி அறிவு இல்லாமற் போவதுடன், அவர்கள் இதற்கு முன் பாடசாலையில் செலவிட்ட வருஷங்களும் முயற்சிகளும் வியர்த்தமாய்ப் போய்விடும்.

பெண் பிள்ளைகளின் கல்வியைப்பற்றிச் சர்க்கார் விசேஷித்த கரிசனையுள்ளவர்களா யிருக்கிறுர்கள். ஆகையால் கிராமங்களில் பள்ளிக் கூடம் போகத்தக்க வயதுள்ள பெண் பிள்ளைகளை நூற்றுக்கு இருபத்தைந்து வீதம் பையன்கள் பாடசாலைகளில் சேர்த்துப் படிப்பிக்கும்படி உத்திரவிட்டிருக்கிறுர்கள். பையன்களின் படிப்பைவிட, பெண்களின் படிப்பு மகாமுக்கிய மென்பதை நீங்கள் யாவரும் அதிகமாய் உணர

வேண்டும். தாய்மார் கல்வி கற்றிருந்தால், அவர்களின் பிள்ளைகளும் கல்வி கற்றிருப்பார்கள் என்பது நிச்சயம். உங்களுக்கு மிகுந்த அவசிய மாயிருந்தால், உங்கள் பையன்களை வீட்டு வேலைக்கு நிறுத்திக்கொண்டு உங்கள் பெண்பிள்ளைகளைத் தயவு செய்து பாடசாலைக்கு அனுப்பி விடுங்கள்,

சர்க்காரின் கொள்கை என்ன வென்பதையும், உங்கள் ஒற்று மைப்பு எவ்வளவு அவசியம் என்பதையும், உங்களுக்கு விளக்கிக்காட்டும் பொருட்டு சில குறிப்புகளை உங்களுக்குச்சொல்லி யிருக்கிறேன், முழு மனதுடன் கூடிய உங்கள் ஒத்துழைப்பு கிடைக்குமாயின் டிபார்ட்டு மெண்டார் பாடசாலை மானேஜர்கள், பாடசாலை ஆசிரியர் இவர் களின் ஊழியம் வெகு சுலபமாயும், சந்தோஷமாயும் முடியும். இந்தியா வின் வருங்கால பிரஜைகளாகிய உங்கள் சொந்தப் பிள்ளைகளின் நன்மை யினிமித்தமும் உங்கள் தேசத்தின் நன்மையினிமித்தமும், நீங்கள உங்கள் உத்தரவாதத்தை உணர்ந்தவர்களாய், உங்கள் பிளளைகளுக்கு அவசிய மான கல்வி அறிவு புகட்டும்படி, அவர்களுக்கென்று ஏற்படுத்த ப்பட்டிருக்கிற பாடசாலைகளுக்கு அவர்களை அனுப்புவீர்களென நான் நம்புகிறேன். உங்களுக்குச் சமீபத்தில் யாதொரு பாடசாலையுமில்லையா ளுல் தெரியப்படுத்துங்கள். உங்களுக்கும் ஓர் பாடசாலை திறக்கப்படும் படி பிரயாசைப் படுவோம்.

இப்போதும் நான் உபந்நியாசிக்கும்படி கேட்கப்பட்டிருக்கும் விஷயம் "பாடசாலைகளில் சுகாதர அஸ்திவாரங்கள்" என்பது தற்கா லம் நமது பாடசாலைகளில் என்ன நடந்து வருகிறதென்பதல்ல, என் னென்ன விஷயங்கள்காணப்படவேண்டு மென்பதை நான் பேசவேண்டிய தாயிருக்கிறது. பட்டணங்களிலுள்ள பாடசாலைகளும், நல்ல பாடசாலைக் கட்டிடங்கள் வாய்க்கப் பெற்றதும், தண்ணீர் வசதியும் சுகாதார முறை களும் அமைந்துள்ளதுமான சில கிராம பாடசாலைகளும் நீங்கலாக, பெரும் பான்மையான கிராமப் பாடசாலைகள், சுகாதாரம், காற்ரோட்ட மில்லாதவைகளும், தகுதி இல்லாத இடங்களில் கட்டப்பட்டும் குளிப்ப தற்கும் குடிப்பதற்கும் தண்ணீர் சௌகரிய மில்லாமலும், யாதொரு வகையான சுகாதார முறைகள் இல்லாமலுமிருக்கக் காணப்படு கின்றன. ஒரு முறைநாம் இப்பாடசாலைகளைப் பார்வையிடக்கூடுமே யானல், அனேகம் பாடசாலைகளில் போதுமான போஷிப்பில்லாமல் நருங்கிப்போயிருக்கும் பிள்ளைகளையும், அசுத்தமுள்ள பிள்ளைகளையும், பல வித நோவுகள் தொற்று வியாதிகள உள்ள பிள்ளைகளையும் நூலாம் படை கள் அலங்காரமாய்ப் படர்ந்ததும், தூசி அழுக்கு முதலியவற்ருல் கறுப்பா யிருக்கும் அறைகளையும் காணலாம். இப்படிப்பட்ட சுகாதாரத்துக் கடுத்த அஸ்திவாரங்களைப் பாடசாலைகளில் போடுமுன், பாடசாலையல் லாத வெளி ஸ்தாபனங்களில் அதாவது சுகாதார விடுதிகளிலும் நான் கூறிய விஷயங்கள் காணப்படவேண்டிய அவசியமில்லையா என்று நீங்

கள் என்னைக் கேட்கலாம். நீங்கள் கேட்பதை நான் முழுவதும் ஒப்புக்கொள்கிறேன். வைத்தியப் பரிசோதனை பாடசாலை வைத்தியம், ஏழைப் பிள்ளைகளின் போஷிப்பு சுகாதாரப் பரீட்சை முதலியவையாவும் பணக்குறைவினால் நடத்தப்படாதிருக்கையில், பாடசாலைகளில் சுகாதாரத்துக் கனுகூலமான அஸ்திபாரங்களைப் போடுவது கஷ்டமாயிருக்கிறது. இவ்வகைப்பட்ட சகல கஷ்டங்களின் மத்தியில், நமது பிள்ளைகள் ஆரோக்கியம், சுகாதாரத்துக் கடுத்த சில விதிகளை அனுசரிக்கும்படி நம்மாலான மட்டும் நாம் பயிற்சி செய்ய வேண்டும். இவ்விதப் பயிற்சி கொடுக்கவேண்டிய முதல் ஆள் கிராமப் பாடசாலை ஆசிரியரே.

அதிர்ஷ்ட வீனமாய் பிரதம பாடசாலைகளிலும், செக்கண்டெரி பாடசாலைகளிலும் அனுஷ்டான மில்லாத வெறும் போதனையா யிருக்கிறது. ஆசிரியர் சுத்தத்தைப் பற்றிய நல்ல பாடல்களைக் கற்பிக்கிறார். ஆனால் தன் பள்ளிக்கூடமாவது, சுற்றுப்புறமாவது, பிள்ளைகளாவது, தானாவது, சுத்தமாயிருக்கிறோமா வென்று சோதித்துப் பார்க்கிறதில்லை. எல்லாப் பாடசாலைகளிலும் "சுத்தம் ஓங்குக" என்ற நடை முறையை ஏற்படுத்தும்படி எனக்குக் கீழுள்ள உத்தியோகஸ்தர்களுக்கு விசேஷித்த கட்டளையிட்டிருக்கிறேன். இன்று இங்கே பிரசன்னமாயிருக்கும் ஆசிரியர்களும் இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுவார்களென்று நம்புகிறேன். உங்கள் பாடசாலையில் ஒரு செஞ்சிலுவைப் பகுதியொன்றை ஸ்தாபியுங்கள். உங்கள் பள்ளிக்கூடமும், பிள்ளைகளும் சுத்தமாயிருப்பதற்கு நீங்களும் செஞ்சிலுவைப் பகுதியாரும் பொறுப்பாளிகள் என்று உணருங்கள். ஜில்லா போர்டிலிருந்து இதற்கு யாதொரு பணச்சகாயம் கிடைக்கவில்லை என்றாவது, ஊர்த்தோட்டி இவ்வேலையைச் சுத்தமாய்ச் செய்யவில்லை யென்றாவது போக்குச் சொல்ல வேண்டாம். "சுயஉதவி" யென்பது உங்கள் சட்ட வாக்கியமாயிருக்கட்டும். உங்கள் பாடசாலையிலுள்ள தூசி, ஒட்டறை முதலியவைகளைச் சுத்தம் செய்வதில் வெட்கப்பட வேண்டாம். பாடசாலையைப் பூரண சுத்தமாய் வைத்துக் கொள்வதினால் உங்கள் வீட்டிலும் சுகாதார அஸ்திபாரங்களைப் போடுகிறீர்கள். ஒரு பிள்ளை தன் பாடசாலையின் மூலை, முடுக்குகளைத் தினசரி சுத்தம் செய்யும் பழக்கத்தைப் பள்ளியில் கற்றுக் கொள்ளுவதிலிருந்து, தன் சொந்த வீட்டையும்கூட அது எவ்வளவு தாழ்வானதாயிருந்தபோதிலும், சுத்தமாயிருக்கும்படி அப்பியாசித்து வரக்கூடும். இவ்விதமாய் இன்று பிரசன்னமாயிருக்கும் ஆசிரியர்கள் யாவருக்கும், அவர்கள் மூலமாய் இங்கு வராமலிருக்கும் மற்றுமுள்ள ஆசிரியர்களுக்கும், நான் மறுபடியும் நேர்முறை வேண்டிக் கொள்ளுவதென்னவெனில், வீட்டிலும் பாடசாலையிலும், சுத்தத்துக்கடுத்த அஸ்திவாரங்களைப் போடும் பொறுப்பு ஆசிரியர்கள் மேலேயே சார்ந்திருக்கிறது என்பதே.

அடுத்தாப்போல் சொல்லவிரும்புவது பிள்ளையின் தனித்தாள் சுத்தம். அனேகம் பாடசாலைகளில் அசுத்த உடுப்புகளின் தோற்றமும்,

தேக சுத்தமில்லாமையினால் உண்டாகும் துர்நாற்றமும், முழுவதும் வெறுக்கத்தக்கதாயிருக்கிறது. பாடசாலைகளில் தனித்தாளுக்குரிய சுகாதார அஸ்தி பாரங்களை எப்படிப் போடலாம்? இது நிறைவேற மானேஜ்மெண்டார், ஆசிரியர், பெற்றோர் இவர்களின் ஒற்றுமை வேண்டியதாயிருக்கிறது. தண்ணீர் வசதியில்லாமல் பாடசாலையில் சுத்தம் பிறப்பிக்க இயலாதபடியால், மானேஜ்மெண்டார் தண்ணீர் வசதிகளை உண்டாக்க வேண்டியது நலமாயிருக்கும். குடிக்கிறதற்குக்கூட தண்ணீர் வசதிகள் உண்டுபண்ணாமலிருக்கிற பாடசாலைகளும் சில உண்டென்று நான் அறிகிறேன். ஆகையால் ஒவ்வொரு பாடசாலைக்கும் பிள்ளைகள் ஸ்நானம் செய்வதற்கும், உடுப்புகள் சுத்தம் செய்வதற்கும் ஒரு நல்ல கிணறு இருக்கவேண்டியது அவசியமே. செங்கற்பட்டு ஜில்லாவில் பிரமஞானசபையால் ஆதரிக்கப்பட்டுவரும் ஓர் பள்ளிக்கூடத்தில் அப்பள்ளியிலுள்ள ஒவ்வொரு பிள்ளையும் தினசரி காலையில் ஸ்நானம் செய்யும் பழக்கமிருந்து வருகிறது. பள்ளிக்குப் போகுமுன் வீட்டில் ஸ்நானம் செய்து போகவேண்டிய பழக்கம் அப்பையன்களுக்குள் வளர்ந்து விட்ட படியால் சில மாசங்களுக்குப் பின் அப்பையன்கள் பள்ளிக்கூடத்தில் ஸ்நானம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவேயில்லை. நான் சொன்னபடி மானேஜ்மெண்டார் தங்கள் பாடசாலையில் கிணறு வசதிகள் செய்தால் இப்படிப்பட்ட பழக்கம் நமது கிராமப் பாடசாலைகளிலெல்லாம் வெகு சுலபமாக உண்டாகிவிடும். அது ஸ்நானம் செய்வதாயிருந்தாலும் சரி, உடுப்புகள் சுத்தம் செய்வதாயிருந்தாலும் சரி, இவ்வேலை சித்தியாய் முடிவதற்கு ஆசிரியரின் உற்சாகமும், சுறு சுறுப்பும் மகா அவசியம். பாடம் துவங்குமுன் எல்லாப் பிள்ளைகளின் "சுகாதாரப் பரீட்சை" ஒன்று ஆசிரியர் செய்ய வேண்டும். சில பிள்ளைகள் ஸ்நானம் செய்யும் பொருட்டும், சிலர் உடுப்புச் சுத்தம் செய்யும் பொருட்டும், வேறு சிலர் தங்கள் விரல் நகங்களைச் சுத்தம் செய்யும் பொருட்டும், மற்றும் சிலர் தங்கள் ரோமங்களைச் சீவிச் சுத்தம் செய்யும் பொருட்டும் அவரவர்களுடைய வீடுகளுக்கு அனுப்ப வேண்டியதாயிருக்கும். ஒரு ஆசிரியர் தினசரி ஐந்து மணி நேரம் தன் வகுப்புப் பாடங்களுக்காக தொண்டை நரம்புகள் வெடிக்க சத்தமிட்டுப் போதித்தும், பாடசாலைக்கு வெளியே என்ன நடக்கிறதென்பதைப் பற்றிக் கவனிக்க உற்சாக மில்லாதிருந்தால் தனித்தாளின் சுத்தத்துக் கடுத்த அஸ்திபாரங்களைப் போட இயலாதவரா யிருப்பார். ஒரு ஆசிரியர் பள்ளிக்கூடம் ஆரம்பிக்க 20 நிமிஷங்களுக்கு முன்னதாகவே பள்ளிக்கு வந்து இவைகளைக் கவனிக்ககூடுமேயாகில் மெய்யாகவே அவர் ஓர் பரோபகாரியாக விளங்குவார். பாடசாலையில் தனித்தாளின் சுத்தத்தைப் பற்றிய பயிற்சி அடைந்து வந்த ஓர் பிள்ளை தன் சொந்த வீட்டிலும் சுத்தம்வளர முயற்சிப்பதுடன், தன் சகோதரர் சகோதரிகளுக்கும், சொல்லப் போனால் தங்கள் பெற்றோர்களுக்கும் அவர்கள் எவ்வளவு

எளியவர்களாயிருந்தாலும் கூட அவர்களும் சுத்தமாயிருக்கும்படி கற்பிக்கும். இவ்விதமாய்ப் பாடசாலை சுகாதார அஸ்திவாரங்களைப் போட்டிருப்பதாய் விளங்கும்

இன்னும் இரு விஷயங்களில் ஒரு ஆசிரியர் தன் பாடசாலையில் சுகாதார அஸ்திவாரங்களைப் போடக்கூடியவராயிருக்க வேண்டும். அவைகள் குடிக்கும் தண்ணீரும் உணவுவகைகளுமேயாம். அனேகம் கிராமங்களில் கிணறுகள் சுத்தமில்லை என்பதும் அசுத்தமான தண்ணீரைக் குடிப்பதினாலேயே பலவிதமான வியாதிகள் உண்டாகிற தென்பதும் யாவரும் அறிந்த விஷயம். சுத்த ஜலத்தைப்பற்றியும் அசுத்தமான ஜலத்தைப் பற்றியும் அனேக ஆசிரியர்கள் பாடங்கள் கற்பிக்கிறார்கள். ஆனால் தங்கள் சொந்த உபயோகத்துக்காகத் தண்ணீரை எப்படிச் சுத்தம் செய்கிறதென்று பாடசாலையில் மாணுக்கருக்கு மாதிரி காட்ட சிரமம் எடுக்கிறதில்லை. தண்ணீரைக் கொதிக்கவைக்க தக்க ஒழுங்குகள் செய்யப்படாமலிருந்தால், சில அணுக்கள் செலவு செய்து மூன்று புதுப்பானைகளும், மணல், அடுப்புக்கரி முதலியவைகளும் வாங்கி, ஏணிப்பானை மூலம் தண்ணீரை வடிகட்டும் முறையை மாதிரியாகச் செய்து காட்டலாம். இந்த சொற்ப செலவைக் கொடுக்க எந்த மானேஜ்மெண்டாவது தடை சொல்ல மாட்டாதென்று நான் நம்புகிறேன்.

ஆகார வகைகளைக் குறித்துச் சொல்லப் புகின் கிராமத்தார் தங்கள் ஆகாரத்துக்கு அதிகமாகக் காய்கறிகளையும் நெல் அரிசிச் சாதத்தையுமே உட்கொண்டு ஜீவிக்கிறார்கள். நல்ல போஷிப்பின்மைக்குக் காரணம் நாம் சாப்பிடும் உணவுகளின் அளவல்ல. ஆனால் நாம் எப்படிப்பட்ட உணவு வகைகள் உபயோகிக்கிறோம் என்பதில் காணப்படும். அவசியமான போஷிப்பு சத்து கொடுக்கக்கூடிய காய்கறிகளைக் கூட பெரும்பாலும் கிராமத்தார் புசிக்கிறதில்லை. ஏனென்றால் காசு செலவிட்டு அவைகளை விலைக்கு வாங்வேண்டியதாயிருக்கிறது. நல்ல உணவின் பிரயோஜனத்தைப்பற்றி ஆசியர் மாணுக்கருக்குப் போதிப்பதுடன், தங்களுடைய சொந்த சாப்பாட்டறைக்குப் போதியதான காய்கறித் தோட்டங்களை உண்டாக்கி வளர்க்கும்படி மாணுக்கரைப் பயிற்சித்து வரவேண்டும். அந்தந்த வீட்டைச் சேர்ந்த சின்னக்காய்கறி தோட்ட நிலமிருந்த போதிலும், ஒவ்வொரு வீட்டுக்கு வேண்டிய காய்கறிகள் போதியதென்று காட்டத்தக்கதாக இத்தோட்டம் சிக்கென முறையில் நடத்தப்பட வேண்டும். தற்காலம் பள்ளிக்கூடத்தோட்டமென்றழைக்கப்படும் பெரும்பான்மையான தோட்டங்களில் ஒரு வாழைமரமோ, ஒரு சூரியகாந்திப் பூச்செடியோ அல்லது அது போன்ற வேறு பூச்செடிகளோ, நாட்டப்பட்டு பேருக்குத் தோட்டம்போல் தோன்றுகிறது. நான் சொன்னவகையான காய்கறித்தோட்டங்களும், அவைகளுடன் தேனீவளர்த்தல், கோழி வளர்த்தல் முதலிய சிறந்த ஆகாரங்கள் மூலமாக, சிறந்த ஆரோக்கியத்துக்குரிய அஸ்திவாரங்களைப் போடக் கூடும்

பெற்றோரின் ஒற்றுமைப்பு, இவைகளின் சித்திக்காக பிரயாசப் படுவதிலும், கூடியமட்டும் பிள்ளைகளைச் சுத்தமாகப் பாடசாலைகளுக்கு அனுப்புவதிலுமே அடங்கி யிருக்கிறது. தரித்திரம் சுத்தத்துக்கு ஒரு பெருந் தடையா யிருக்க வேண்டாம். நீங்கள் கவனிக்க வேண்டிய விஷயம் உங்கள் பிள்ளைகள் பாடசாலைக்குப் போகும்போது ஸ்நானம் செய்து, சுத்தமான உடுப்புகளுடன் போகிறார்களா வென்பதைப் பார்ப்பதுவே. இதனால் பிள்ளைகள் தங்கள் பள்ளிக்கூடத்தில் ஸ்நானம் செய்யும்படி ஆசிரியர் கட்டளை யிடாதபடி அவரின் சிரமத்தை இலகுவாக்கும் உங்கள் பிள்ளையும் சுத்தமாயிருப்பதினால் ஆரோக்கியமாயும் சந்தோஷமாயுமிருக்கும்.

விளையாட்டுகளைப்பற்றி அதிகம் நான் சொல்ல விரும்புகிறதில்லை. கிராமப் பிள்ளைகள் வெளி மைதானங்களிலுள்ள சுத்த ஆகாயத்தை சுவாசித்து வருகிறார்கள். அவர்களில் அனேகர் போஷிப்பில் குறைவாகவே இருக்கிறார்கள். இவ்விதமாய் ஒரு கிராமப் பிள்ளைக்கு பட்டணங்களிலுள்ள பிள்ளையைப்போல் தேகாப்பியாசப் பயிற்சி அவ்வளவு அவசியமாய்த் தோன்றமாட்டாது. ஆனால் பிள்ளைகளுக்கு விளையாட்டுகள் அவசியம். ஏனெனில் இளைப்பாறுதலும் ஒத்துழைப்பும் ஜீவியத்தை வளரச் செய்யும். அவைகள் ஆரோக்கியமுள்ள மனங்களையும் ஆரோக்கியமுள்ள சரீரங்களையும் பலப்படுத்தக்கூடிய சாதனங்களாம். ஆசிரியர்கள் விளையாட்டுகளை உற்சாகப் படுத்தவேண்டும். இவ்விதமாக பாடசாலை விளையாட்டுகளும் கூட சுகாதார அஸ்திவாரங்களையும் போடக்கூடியவைகளே.

பாடசாலைகளில் சுகாதார அஸ்திவாரங்களைப் போடக்கூடிய தான நடைமுறைக்கடுத்த சில ஆலோசனைகளை உங்கள் முன் வைத்திருக்கிறேன். மானேஜ்மெண்டார் ஆசிரியர்கள் பெற்றோர் இவர்களின் ஒற்றுமைப்பு நமக்கிருந்தால் நமது பாடசாலைகளை முன்னேற்றக்கூடாத பணக் கஷ்டங்கள் மற்றுமுள்ள சங்கடங்களின் மத்தியில் இப்படிப்பட்ட முக்கியமான அஸ்திவாரங்களைப் பத்திரமாய்ப் போடக்கூடுமெனத் தெரிகிறது. கல்வி இலாகாவின் பிரதிநிதியாக அவ்வித ஒற்றுமைப்புக்காக உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

இந்த வைபவத்தில் நானும் பங்கெடுக்கும்படியும், இன்று மாலையில் உங்களுக்கு உபந்நியாசிக்கும்படிக்கும், கனம் லார்பியர் துரையவர்கள் என்னை அழைத்ததற்காக என் மனமார்ந்த வந்தனம் கூறுகின்றேன். என் வேண்டுகோளின் பலனைப் பாடசாலைகளில் பிள்ளைகளின் தொகை அதிகரித்து, வருங்காலத்தில் பாடசாலைகளும், பாடசாலைப் பிள்ளைகளும், சுத்தமாயும், சுகமாயும் காணப்படுவார்களே யானால் நான் நிச்சயமாகவே மகிழ்ச்சி கொள்ளுவேன். இந்தப் புதிய சிசு சம்ரக்ஷணகிரஹமும் சகல சித்தியுமடைய ஆசிக்கின்றேன்.

---

* பசுமலையில் செய்த உபந்யாசத்தின் மொழிபெயர்ப்பு.

கையினால் காகிதம் செய்யும் விதம்

By K. Krishnamurthy, B. A., L. T.

நான் உங்களுக்கு கையினால் காகிதம் எப்படிச் செய்வது என்பதைப் பற்றி சொல்லப்போகிறேன்.

நாம் தினந்தோறும் உபயோகிக்கும் காகிதம் எப்படி வந்தது. எதிலிருந்து வந்தது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். மேல் நாடுகளிலிருந்து வரும் காகிதங்களையோ அல்லது மேல் நாட்டிலிருந்து வரும் காகிதக் குழம்பிலிருந்து இங்கேயே மிஷின்களில் உண்டாக்கப் பட்ட காகிதங்களையோ தான் நாம் உபயோகிக்கிறோம்.

இப்பொழுது மிஷின்களை உபயோகப்படுத்தாமல் நமது கைகளை மாத்திரம் உபயோகித்து எப்படி காகிதம் எடுப்பது என்பதுதான் நான் சொல்லப்போகும் விஷயம். அதாவது பஞ்சிலிருந்து எப்படி நாம் மிஷின்களை உபயோகப்படுத்தாமல், டக்ளி, ராட்டினம் முதலியவற்றால் நூல் நூற்று, அதை கையினாலேயே நெசவுசெய்து துணிகள் உண்டாக்குகிறோமோ அதேமாதிரி, காகிதம்செய்ய நமக்கு வேண்டிய மூலபொருளிலிருந்து, கையினாலேயே நாம் காகிதம் செய்து முடிக்கவேண்டும்.

இப்படி காகிதம் செய்ய மூலபொருள்கள் யாவை? காகிதம் என்பது ரஸாயன சாஸ்திரப்படி 'செல்லு லோஸ்' என்பதால் ஆன ஒரு மெல்லிய தாள். ஆகையால் நமக்கு காகிதம் செய்ய இந்த செல்லு லோஸே வேண்டும். இந்த 'செல்லு லோஸ்' என்றும் ரஸாயன பொருள் நார்கள் மிகுந்த தாவரவர்க்கங்களில் (plants rich in fibres) வேண்டிய மட்டும் ஏராளமாய் இருக்கின்றது. செல்லு லோஸ் தத்ரூபமாக இயற்கையில் கிடைப்பதில்லை. அது எண்ணை, கொழுப்பு முதலிய வஸ்துக்களுடன் கலப்புற்றே நார்களாக இயற்கையில் காணப்படுகிறது. அதாவது தாவர வர்க்கங்களில் காணப்படும் நார்கள் செல்லு லோசும், மற்ற பொருள்களாலும் ஆனது.

நமக்கு காகிதம் செய்ய இந்த செல்லு லோசே வேண்டும் என்று மேலே சொன்னோம். இந்த செல்லு லோஸ் தாவர வர்க்கங்களில் இருக்கின்றது என்றும் சொன்னோம். ஆகையினால் நார்கள் மிகுந்த தாவர வர்க்கங்களே நாம் காகிதம் செய்வதற்கு வேண்டிய மூலப்பொருள். இதற்கு உதாரணமாக நாம் சணல், வாழைப்பட்டை, சம்பு, புளிச்ச நார், வைக்கோல் மற்றும் நார்கள் மிகுந்த புல் வகைகள், கத்தாழை,

பிரம்பு, மூங்கில் மற்றும் சில மரங்கள் (தேக்கு etc.,) முதலியன. இவை களில் ஏதாவது ஒன்றிலிருந்து நாம் காகிதம் செய்யலாம்.

மேலும் செல்லுலோஸ் என்னும் வஸ்து, பருத்தியில்தான் மிக அபரிமிதமாகக் காணப்படுகிறது. அதாவது, 100-க்கு 90-க்கு மேல் பருத்தி செல்லுலோசால் தான் ஆகியிருக்கிறது. ஆகையினால் பருத்தி, பருத்தியினால் ஆனபொருள்கள் (துணிகள், உடைகள்) முதலிய னவைகளிலிருந்தும் நாம் பேபர் எடுக்கலாம். அப்பேர்ப்பட்ட காகிதம் மற்ற மூலப்பொருளிலிருந்து எடுக்கப்படுவதை விட மிகவும் வலிவுடைய தாக இருக்கும்.

மேல் கூறியபடி நாம் காகிதம் எடுக்க ஏதாவது ஒரு மூலப் பொருளே போதும். எல்லாம் வேண்டும் என்ற அவசியமில்லை. மேலும் அந்த அந்த மூலப்பொருளும் புதியதாகவும் விலை கொடுத்துவாங்க வேண் டியும் இருக்கவேண்டாம். அதாவது வேறு ஒரு விஷயத்திற்கும் உப யோகப்படாத கழிவு பொருள்களையே நாம் உபயோகப் படுத்தலாம்.

உதாரணமாக, சணல் அல்லது வாழையை நாம் எடுத்துக்கொண் டால், புதியதாக சணல் கல்கத்தாவிலிருந்து வரவழைக்க வேண்டாம், புதியதாக வாழைத் தோட்டத்திலிருந்து வாழைமரங்களை வெட்டிக் கொண்டு வரவேண்டாம், ஆனால் சணல்களால் ஆன சாக்கு, கோணிப் பைகள் முதலியவை கிழிந்துபோய், இனிமேல் உபயோகமில்லாமல் போன பிறகே நமக்கு உபயோகப்படும். வாழைப்பட்டைகள் எவ்வ ளவோ சறகுகளாக்கப்பட்டு வெய்யிலிலும் மழையிலும் அடிப்பட்டு வீணா கப் போகின்றன. அப்பேர்ப்பட்டவைகளே நமக்கு உபயோகப்படும்.

பருத்தியை எடுத்துக்கொண்டால், நாம் புதியதாக நல்ல கொட்டை எடுத்த பஞ்சை வாங்கி உபயோகப் படுத்த வேண்டிய அவ சியமில்லை. சாதாரணமாக நம் வீட்டில் கிழிந்து போன கந்தைத் துணி கள், ஆடைகள், நமக்கு பிரயோசனமில்லாமல் போன பிறகு, நாம் காகிதம் செய்ய உபயோகிக்கலாம். மேலும் பஞ்சுக் கிடங்குகளில் வீணாக் கப்படும் பருத்திக்கழிவுகளே நமக்கு போதும்.

எதற்காக இவற்றை சொல்லுகிறேன் என்றால், நாம் காகிதம் எடுக்க உபயோகிக்கும் மூல பொருள் மிகவும் சுலபமாகவும், பணச்சிலவு இல்லாமலே கிடைக்கும். மேலும் நாம் உபயோகிக்கும் மூலப்பொருள் இதர எந்த உபயோகமான வழியிலும் உபயோகப்படுவதில்லை. அவை வீணாகத்தான் போகிறது. ஆகையால் நாம் வீணாகப் போகும் waste (கழிவு) பதார்த்தங்களிலிருந்தே காகிதம் எடுக்கிறோம்.

மிகவும் சுலபமாகவும் சீக்கிரமாகவும் காகிதம் செய்வதற்கு நாம், நமக்கு வேறு எந்தவிதத்திலும் உபயோகப்படாத, கழிவு காகிதத்தையே உபயோகிக்கலாம்.

அதாவது, அச்சாபீஸ்களில் ஏராளமாக வீழ்த்தப்படும் **press-cuttings**, நாம் எழுதி உபயோகித்து பிறகு கிழித்து எறியும் காகிதங்கள், முதலியவைகளைக் கொண்டே நாம் காகிதம் செய்யலாம்.

இப்பொழுது மேலேகூறிய ஏதாவது ஒரு மூலப்பொருளிலிருந்து எப்படி காகிதம் தயாரிப்பது என்று நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

எடுத்துக்கொண்ட மூலப்பொருளை நன்ருக ஈரம்போக காய வைத்து, (கழிவு காகிதத்தைப்போல் காய்ந்த மூலப்பொருளாக இருந்தால் இது அவசியமில்லை.) சுத்த தண்ணீரில் அலசி கழுவவேண்டும். பிறகு திரும்பவும் காயவைத்து நன்ருக சிறு துண்டுகளாக வெட்ட வேண்டும். இப்பொழுது இத்துண்டங்களை ஒருதொட்டியில் போட்டு, அத்துண்டங்கள் முழுவதும் நனைந்து இருக்குமாறு தண்ணீர் ஊற்றி, அத்தண்ணீரில் மூலப்பொருளுக்குத் தக்கவாறு "காஸ்டிக் சோடா" கரைமாணம் ஊற்றி 1 லிருந்து 3 நாள்வரை ஊரவைக்கவேண்டும். அப்படி ஊறினபிற்பாடு, அந்த காஸ்டிக் நீரை வடியவிட்டு, அத்துண்டங்களை தண்ணீர்விட்டு 3 அல்லது 4 முறை கழுவவேண்டும். பிறகு அத்துண்டங்களை நன்ருக இடித்து, கொட்டி, அரைத்து, நசுக்கி பஞ்சுபோல் மிருதுவாகும்படி செய்யவேண்டும். இப்படிச்செய்வதற்கு டிங்கி என்று பெயர்கொண்ட ஒரு சாதனத்தை உபயோகிக்கலாம். அல்லது உரலில் அத்துண்டங்களைப்போட்டு இடிக்கலாம். கழிவுகாகிதத்தை நாம் எடுத்துக்கொண்டோமாளுல் அதை நம் கால்களால் நன்ருகமிதித்து, தேய்த்து, அறைத்தே பஞ்சுபோல் மிருதுவாக்கிவிடலாம் இப்படியாக நன்ருக நசுக்கப்பட்ட மூலப்பொருளை ஒரு தொட்டியில் போட்டு, தண்ணீரில் கரைத்த பிளீசிங் பௌடர் கரைமாணத்தை அதனுடன் சேர்த்து, நன்ருகக்கலக்கி ஊரவைத்து, மூலப்பொருளில் சாயத்தைக் கூடுமான வரையில் போக்கடிக்கவேண்டும். பிற்பாடு மூலப்பொருளை நன்ருகக் கழுவி மற்றும் ஒரு தொட்டியில்போட்டு வேண்டிய அளவு தண்ணீர் விட்டு நன்ருகக் கலக்கவேண்டும். அப்படிச் செய்தால் அது ஒரு குழம்பாகமாறி அம்மூலப்பொருளின் அணுக்கள் தண்ணீருடன் நன்ருக கலந்து நிற்கும்.

இக்குழம்பிலிருந்துதான் நாம் காகிதம் எடுக்கவேண்டும். அப்படி காகிதம் எடுக்க என்று ஏற்பட்ட ஒரு பாய்வேண்டும். இப்பாயானது ஊகை விளக்குமாற்றுக் குச்சிகளாலும், குதிரை மயிர்களாலும் ஆனது. ஆதலால் மிகவும் சொற்பசெலவில் ஆகக்கூடியது. இந்தப் பாயை அதற்கு என்று ஏற்பட்ட ஒரு சட்டத்தின்மேல் வைத்து தயார் செய்து, அந்தச் சட்டத்துடன் இப்பாயை அந்த குழம்பில் முக்கி எடுக்க வேண்டும். அப்படி எடுக்கும்போது தொட்டிக்குள் இருக்கும் குழம்பு பாயின்மேல் ஒரு மெல்லிய படிமானமாகப் படியும். பாயில் எடுக்கப்பட்ட குழம்பிலுள்ள தண்ணீர் பாயின் சந்துக்களின் வழியாக திரும்ப

வும் தொட்டிக்குள் விழுந்துவிடும். ஆகவே நாம் எடுத்துக்கொண்ட மூலப்பொருளின் அணுக்கள்மாத்திரம் பாயின்மேல் ஒரு மெல்லிய படிமானமாக இருக்கும். இப் படிமானந்தான் காகிதம். இப்படிமானத்தின்மேல் ஒரு துணியை விரித்து, அத்துணியுடன் பாயை ஒரு மேஜையின்பேரில் தலைகீழாகக் கவிழ்க்க, துணியுடன் காகிதம் மேஜையின்பேரில் விழுந்துவிடும். பாய் தனியாக வந்துவிடும்.

பிற்பாடு, இந்த பாயையே நாம் அடுத்த காகிதம் எடுக்க உபயோகிக்கலாம். ஆகவே ஒரே பாயைக்கொண்டு எவ்வளவோ காகிதங்கள் எடுக்கலாம். ஆனால் ஒவ்வொரு காகிதத்திற்கும் அதன்மேல் பரப்ப ஒவ்வொரு துணி வேண்டும். இப்படி எடுக்கும் காகிதங்களை எல்லாம் ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கி, தண்ணீர் வடிய ஒரு பலகையைக்கொண்டு அமுக்கி, பின் ஒவ்வொரு துணியுடன் ஒவ்வொரு காகிதத்தையும் காயப் போடவேண்டும். காய்ந்த காகிதங்களை துணியிலிருந்து வெவ்வேறாகப் பிரித்து ஒவ்வொரு காகிதத்தின் இருபுறமும் சாதக் கஞ்சியை ஒரு பிரஷினால் தடவி திரும்பவும் காயப்போட வேண்டும். காய்ந்தபின் காகிதத்தின் 2 புறங்களையும் ஒரு சோழியினாலோ, கூழாங்கல்லினாலோ நன்றாகத் தேய்க்கவேண்டும். அப்படிச் செய்தால் காகிதம் பளபளப்புடன் பிரகாசிக்கும். இப்பொழுது காகிதங்களை வேண்டிய அளவிற்குக் வெட்டி உபயோகிக்கலாம்.

ஆகவே நாம் காகிதம் கையினாலேயே எடுப்பது மிகவும் சுலபம். அதற்கு நமக்குத் தேவையான சாமான்களும் மிகவும் சொற்பம். மிகவும் சுலபமாகவும் சொற்ப செலவிலேயே கிடைக்கக்கூடும்.

ஆகவே, நம்மில் ஒவ்வொருவரும் இந்தக் கைத்தொழிலைக் கற்றுக் கொண்டு, மற்ற எந்த விதத்திலும் நமக்கு உபயோகப்படாத சாமான்களிலிருந்தே, மிகவும் சுலபமாக காகிதம் செய்யலாம்.

நண்பர்கள் அனைவரும் அப்படியே செய்வீர்கள் என்று நம்புகிறேன்.

வந்தேமாதரம்

—

கலையும், கைத்தொழிலும். V

R. M. Savur, *Divisional Inspector of schools.*

(புரட்டாசியீ 208-ம் பக்கம் தொடர்ச்சி)

போத்தான் அமைத்தல்

தோல்பை செய்வதில் பொத்தான் அமைத்தல் கடைசியான வேலை. சிறிய தோல்பைகளை மூடுவதற்குச் சாரதாரணமாக அமுக்கும் போத்தான் (Press Button) தான் வைப்பது வழக்கம். நாம் செய்யப் போகும் தோல்பையின் மூடிக்கும் அமுக்கும் போத்தான் சிறந்தது.

அமுக்கும் போத்தானின் பாகங்கள் எவை? (1) மூடி, (2) ஸ்பிரிங் (Spring) அவை இரண்டும் தனித்தனியே படங்களில் காட்டப் பட்டிருக்கின்றன.



மூடியின் குமிழ், சுரை



ஸ்பிரிங், ஸ்பிரிங் கின் சுரை

மூடியில் இரண்டு பாகங்கள் இருக்கின்றன. ஒன்று மூடியின் குமிழ். இரண்டாவது சுரை. ஸ்பிரிங்கிலும் இரண்டு பாகங்கள் உண்டு. அவை சுரைக்குள் போகும் ஸ்பிரிங், ஸ்பிரிங்கின் அடிப்பாகமாகிய சுரை.

இனி பொத்தான் அமைக்கும் விதத்தை கவனிப்போம். பொத் தான் கவரும் இடத்தின் மத்தியில் ஒரு ஊசியால் துவாரம் செய்யவேண் டும். பிறகு பையை சுருக்கமில்லாமல் மேஜையின்மேல் வைத்து மூடியால் மூடி முதலில் செய்த துவாரத்தின் வழியே பையின் முன்பக் கத்தில் துவாரம் போடவும். துவாரம் செய்யும்போது தோலின் பின் பக் கத்தில் ஊசி பாயாதவாறு ஜாக்கிரதையாயிருக்கவும். துவாரம் சரியாக இருக்கவேண்டுமானல் ஊசி சாயாமல் செங்குத்தாக அழுத்தப் படுவது அவசியம்.

மறக்கக்கூடாத விஷயம் ஒன்றுண்டு. பொத்தானின் மூடி பையின் மூடியிலே அமைக்கப்படவேண்டும்; ஸ்பிரிங், பையின் முன் பக்கத்தி

லிருக்கவேண்டும் பொத்தான் மூடி பொருத்தப்படவேண்டிய துவாரம் பெரிதாகவும், ஸ்பிரிங் வரவேண்டிய இடத்திலுள்ள துவாரம் சிறியதாகவும் இருக்கவேண்டும். இந்த இரு சிறிய ஊசித் துவாரங்களையும் முறையே பொத்தானின் சுரையையும், ஸ்பிரிங்கையும் அமைப்பதற்குத் தருந்தாற்போலுள்ள துவாரங்களாகச்செய்ய தகுதியான துவாரம் செய்யவும் அளவைகள் கொண்ட கருவிகளை (Punches) உபயோகிக்க வேண்டும்.

மிருதுவான தோலில் பை செய்யப்பட்டால் இத்துவாரங்கள் பொத்தான் மூடியைவிடச் சிறியதாக இருக்கவேண்டும். ஏனெனில் மிருதுவான தோல் நெகிழ்ந்து துவாரம் பெரிதாகி பொத்தான் பிரயோஜன மற்றதாகிவிடும். தடிப்பான நெகிழக்கூடாத தோலாக இருந்தால் துவாரம் மூடியின் அளவுக்குச் சரியாக இருத்தல் வேண்டுமென்பதே துவாரம் சற்றுப் பெரிதாக இருப்பதைக் காட்டிலும் சற்று சிறிதாக இருப்பது நல்லது என்பதை ஞாபகத்தில் வைக்கவும்.

துவாரங்கள் செய்யப்பட்ட பிறகு பொத்தான் மூடியின் சுரையை தோல் மூடியின் துவாரத்தில் உட்புறத்திலிருந்து நுழைக்கவும். இப்பொழுது சுரை மேல் பக்கம் வரும். பையின் மூடியைப்பிரித்து குமிழியை ஒரு பித்தளை அச்சில் இதனை வைத்து சிறிய சுத்தியால் சுறையின்மேல் ஒரு தட்டு தட்டவும். குமிழை 'அச்சில்' வைத்து அடிப்பதற்குக் காரணம், குமிழ் நசுங்கிவிடாமல் இருக்கவேண்டும். அப்போது பொத்தான் மூடியின் இருபக்கங்களும் மேலும் கீழும் இருந்து தோல் பையின் மூடியைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளும்.

இனி 'ஸ்பிரிங்கை' எவ்வாறு அமைப்பதென்பதை கவனிப்போம். ஸ்பிரிங்கின் சுரையை தோல் பையின் உட்புறத்திலிருந்து துவாரத்தின் வழியே செலுத்தவும். இப்பொழுது சுரை பையின் வெளியே தெரியும். பையின் உட்புறத்தில் ஒரு தகட்டை வைத்து ஸ்பிரிங்கை சுரையின் மேற்பத்தில் பொருத்தி சுத்தியால் ஒரு தட்டு தட்டவும். இப்பொழுது ஸ்பிரிங்கின் இருபாகங்களும் பையின் தோலை கெட்டியாகப் பிடித்துக் கொள்ளும்.

இவ்வாறு பொத்தானின் இரு பாகங்களாகிய மூடி, ஸ்பிரிங் இவைகளை எவ்வாறு தோல் பையில் பொருத்தவேண்டுமென்று தெரிந்து கொண்டோம்.

இனி தோல்பையை எவ்வாறு அழகு படுத்தலாம் என்பதைக் கவனிப்போம்.

நமது மாகாணத்தில் ஆரம்பக்கல்வி

S. T. ராமானுஜ அய்யங்கார், (கூட்டுக் காரியதரிசி, S. I. T. U.)

II

G. O. 416-ன் கீழ் ஏற்பட்டிருக்கும் தாலூகா ஆசிரிய சங்கங்கள் கீழ்க்கண்ட விஷயங்களைப்பற்றி தென்னிந்திய ஆசிரிய சங்கத்திற்கு புள்ளி விவரங்கள் அனுப்பினால், நமது மாகாணத்தில் ஆரம்பக்கல்விக் கொள்கை எவ்வாறு வழங்கி வருகிறது என்பதை நன்கு வெளிப்படுத்தலாம், அவையாவன :—

(1) தாலூகாவில் தாலூகா சங்கத்தில் உள்ள அங்கத்தினர்கள். எல்லோருமா, சிலர்தானா ?

(2) ஷை சங்கங்கள் ஜில்லாக்களுடன் இணைக்கப்பட்டனவா ? இல்லையானால், ஏன் ?

(3) ஜில்லா போர்டு, முனிசிபல், எய்டெட் யூனியன்கள் இதுவரையில் அனுப்பித்திருக்கும் விண்ணப்ப விவரங்களும், டிபார்ட்மெண்டாரின் பதில்களும்.

(4) போர்டு ஆசிரியர்கள், புது விதிகளை முனிசிபல் ஆசிரியர்கள் அநுஷ்டிக்கச் செய்தமுயற்சிகள்,பலாபலன்கள்—செய்யாததற்காகவோ, ஊழல்களுக்காகவோ அவர்கள் கொடுத்திருக்கும் அபராதங்கள், பட்டிருக்கும் தண்டனைகள், விவரம்.

(5) எய்டெட் பள்ளிக்கூடங்களில் எவ்வளவு பள்ளிக்கூடங்கள் தாலூகாவில் **minus,** கிராண்டு வாங்கின ? எவ்வளவு பள்ளிகள் **plus** கிராண்டு வாங்கின ?

(6) எய்டெட் பள்ளிக்கூடங்களுக்கு எவ்வளவு பள்ளிகளுக்கு ஒரு தரமாவது இன்னும் **Quarterly** கிராண்டு வரவில்லை.

(7) போர்டு முனிசிபல் ஆசிரியர்கள் மாற்றுதல் விவரங்கள்—காரணங்கள். T. A. கொடுக்கப்பட்டதா இல்லையா ?

(8) எவ்வளவு பள்ளிகளில் இன்றும் சம்பள பாக்கிகள் இருக்கின்றன ?

(9) கிராண்டு நிர்ணயம் விஷயமாக விதிகளில் உள்ள கஷ்டங்கள்—அனுபவ விவரம்.

(10) ஆரம்பக் கல்வி விதிகளைச் சீர்திருத்த வேண்டுமானல் சிபார்சுகள் என்ன? எதற்காக?

(11) பிள்ளைகளைப் பள்ளிகளில் சேர்க்கும் விஷயம், (admission) பிள்ளைகளின் ரிகார்டு, (Record Sheet), ஆசிரியரின் சர்விஸ் ரிஜிஸ்தர், (Service register) பள்ளிகளின் இடவசதி, (School place) பள்ளிக்கூட நாட்கள், மணி, (Working days & School day) உபரி ஆசிரியரின் அவசியம், (n + 1 teacher) இன்ஸ்பெக்டர்களின் பார்வையிடுதல், (Inspection) பாடத்திட்டத்தின் சௌகரிய அசௌகரியங்கள், (Syllabus problem) G. O. 417–ன் கீழ் உள்ள சங்கங்களின் வேலைகள், (Work of range Associations) சங்கங்களில் படிக்கப்பட்ட சுற்றறிக்கைகளின் நகல்கள், (Copies of G. O's & circulars read) முதலியனவைப்பற்றி முழு, உண்மையான, பொடி விவரங்கள்,

(12) சென்ஸஸ் எடுப்பது, பிள்ளைகளைப் பள்ளிக்குவரும்படி செய்தல், பெற்ருேர் ஒத்துழைப்பு, பள்ளிக்கூட அதிகாரிகள், டிபார்ட்மெண்டார் முதலியவரின் ஒத்துழைப்பு விவரங்கள், இவ்விதமாக ஒவ்வொரு தாலுகா யூனியனும், ரேஞ்சு சங்கமும் விவரங்கள் அனுப்புவது ஆரம்ப ஆசிரியர்களின் வசதிகள், கஷ்டங்களை விளக்குவதுடன், ஆரம்பக் கல்விக் கொள்கை ஒவ்வொரு தாலுகாவிலும் எப்படிப் முன்னேறி வருகிறது என்னும் படிப் பிணக்கும் உபயோகமாகும். ஆரம்ப ஆசிரிய சங்கங்களின் உண்மையான அனுபவங்களையும் விவரங்களையும் கொண்டு, தென்னிந்திய ஆசிரிய சங்கம் இதுகாறும் ஆரம்பக்கல்விக்குச் செய்துவரும் தொண்டை விட ஜாஸ்தியாக செய்ய முடியும். மேலும் ஆரம்பக்கல்வியின் சர்க்கார் கொள்கையும் உபாயங்களும் ஆரம்ப ஆசிரியர்களின் சம்மதத்தையும், ஒத்துழைப்பையும் பெற்றுளதா என்னும் விளக்கலாம். அதிலிருந்து அவை சரிய, இல்லையை என்று வெளிப்படும், சர்க்கார் கொள்கையையும், உபாயங்களையும் தென்னிந்திய ஆசிரியசங்கம் திருத்தி அமைக்க முயன்று வருகிறது அடுத்த கட்டுரையில் S. I. T. U வேண்டுவது என்ன என்பது வெளிவரும்.

—

படிப்பின் சில முக்கியமான மூலாம்சங்கள்

T. N. Krishnamurthi, M. A., L. T.,
Dy. Inspector of Schools, Madras South.

(205-ம் பக்கத் தொடர்ச்சி)

3. வகுப்பு பாகுபாடு

சென்ற மாதம் பாட நியமிப்பைப் பற்றி சில குறிப்புகள் எழுதினேன். இந்த மலரில், பிள்ளைகளை எப்படித் 'தரம் பிரிப்பது (**classification**) என்பதைப் பற்றிக் கூற விரும்புகிறேன். எந்த வகுப்பை நாம் எடுத்துக்கொண்ட போதிலும், அதில் அநேகவிதமான பிள்ளைகள் இருக்கிறார்கள் என்ற உண்மையை உபாத்தியாயர்களாகிய நீங்கள் தெரிந்து கொண்டிருப்பீர்கள். மந்தபுத்தி யுள்ள பிள்ளைகள், சாதாரண பிள்ளைகள் அதிக புத்தியுள்ளவர்கள், சில பாடங்களில் மந்தமாகவும் சில பாடங்களில் அதிக முற்போக்காகவும் இருக்கக்கூடிய பிள்ளைகள், கவனக்குறைவான பிள்ளைகள், சரிவர பள்ளிக்கூடம் வராத பிள்ளைகள் என்று அநேகதரமாக நாம் வகுப்புப் பிள்ளைகளை தரம்பிரிக்க வேண்டியிருக்கிறது. இப்பிள்ளைகள் எல்லோரையும் ஒருங்கு சேர்த்து ஒரே பாடத்தை ஒரே சமயத்தில் கற்பிக்கத் தொடங்கும்போது, நமக்கு அநேகவிதமான கஷ்டங்கள் ஏற்படுகின்றன. நமது வகுப்பு போதனை (**class-Teaching**) மூலமாக எல்லோரும் பயன்படுவதில்லை. எப்போது எல்லா பாடங்களுக்கும் வகுப்புப் போதனை பயன்படுவதில்லையோ, அப்போது அத்தகைய போதனையை மாற்றி, நமது பிள்ளைகளுக்கேற்ற போதனு முறையை நாம் கையாள வேண்டும். உதாரணமாக, ஓர் வைத்தியன் தான் கொடுத்துக்கொண்டிருக்கும் மருந்தினால் ஒருவர்க்கேற்பட்ட வியாதி சொஸ்தமடையவில்லை என்று தெரிந்து கொண்டால் உடனே மருந்தை மாற்றவேண்டு மல்லவா? அதேமாதிரியாக நாம் கையாளும் போதனுமுறையும், வகுப்புப் பாகுபாடும் பிள்ளைகளுக்கு முழு பிரயோசனத்தையும் கொடுப்பதில்லை என்றால் நாம் அவைகளை மாற்றிக் கொள்ளவேண்டிய தவசியம். நமது பள்ளிக்கூடங்களுக்கும் மேல் நாட்டுப் பள்ளிக்கூடங்களுக்கும் உள்ள முக்கிய வித்தியாசம் இதுவே. நாம் நமது பள்ளிக்கூடங்களில் இருக்கக்கூடிய தற்கால நிலைமையை சற்று கவனிப்போம்.

நகரங்களிலுள்ள பள்ளிக்கூடங்களோ, கிராமங்களிலுள்ள பள்ளிக்கூடங்களோ, எதை எடுத்துக்கொண்ட போதிலும், அவற்றில் சில பொதுவான குறைகளை நாம் காணலாம். அவை யாவன:—

(1) ஒரே வகுப்பில் வித்தியாசமான வயதுள்ள பிள்ளைகள்.

(2) ஒரே வகுப்பில் வித்தியாசமான திறமையுள்ள பிள்ளைகள்.

(3) ஒரே வகுப்பில் வெவ்வேறு மாதங்களில் வந்து சேர்ந்தபிள்ளைகள்.
(4) ஒரே வகுப்பில் தேக்கமடைந்த பிள்ளைகள்.

இவர்கள் எல்லோருக்கும் ஒரே சமயத்தில் ஒரே பாடம் கற்பிக்கப் படுகிறது. இந்த நியமிப்பினால் தேக்கம் அதிகப்படுவதுடன், பிள்ளைகள் படிப்பில் பற்றில்லாமல் சிதறிப்போவதும், பிள்ளைகள் மேன்மேலும் புத்தி மழுங்கிப்போவதுமே, கைகண்ட பலன்கள். இத்தகைய நியமிப்பை, சீர்திருத்த வேண்டியது உபாத்தியாயர்கள் கடமையாகும். எம்மாதிரி யாகச் சீர்திருத்தலாம் என்பதைப் பற்றி சுருக்கமாகச் சொல்கிறேன்.

ஒரே திறமையுள்ள பிள்ளைகள் நமது பள்ளிக்கூடங்களில் வந்து சேர்வார்கள் என்று நாம் எக்காலத்திலும் எதிர்பார்க்க முடியாது. அப் படிச் சேரும் பிள்ளைகள் நாள் தவறாமல் பள்ளிக்கூடத்துக்கு வந்து கொண்டே யிருப்பார்கள் என்று நாம் எதிர்பார்ப்பதும் தவறு. பள்ளிக் கூடம் திறந்த தேதியிலேயே எல்லாப் பிள்ளைகளும் சேர்ந்துவிடுவார்கள் என்று நினைப்பதும் நமது அனுபோகத்துக்கு விரோதமாக இருக்கிறது. ஆகையால் வித்தியாசமான திறமையுள்ள பிள்ளைகள், அடிக்கடி அநேக காரணங்களால் ஆஜராகாத பிள்ளைகள், வருஷமுழுவதும் சேரும் பிள்ளை கள் நிறைந்த வகுப்புகளே நமது பள்ளிக்கூடங்களில் இருக்கும். இத் தகைய பிள்ளைகளை நாம் எப்படிப் பிரிப்பது என்பதே நமது ஆராய்ச்சி யின் நோக்கமாக இருக்கவேண்டும்.

முதலாவதாக வகுப்புகளில் இருக்கக்கூடிய பிள்ளைகளை ஒரே வய தினராக நாம் சேர்த்துக்கொள்ளலாம். ஒரே வகுப்பில் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட பிரிவுகள் இருக்குமேயானால் அப்பிரிவுகளை **(Sections)** பிரிக்கும்போது ஒரு பிரிவில் ஒரே வயதுள்ள பிள்ளைகளையே சேர்க்கலாம். இப்படிச் சேர்ப்பதனால் ஒரே இயல்புள்ள பிள்ளைகள் வகுப்புக்களில் இருக்கிறார்கள். இரண்டாவதாக, மற்றொரு பாகுபாடும் அவசியமாக இருக்கிறது. ஒரே வயதுள்ள பிள்ளைகள் ஒரே திறமையுள்ள வர்கள் என்று நாம் கூறமுடியாது. ஆகையால் பிள்ளைகளை ஒவ்வொரு வகுப்பிலும் மூன்று திறத்தினராகப் பிரிப்பது அவசியம். நல்ல திறமை யுள்ள பிள்ளைகள், சாதாரண திறமையுள்ளவர்கள், திறமை குறைவுள்ள வர்கள் எனப் பிரித்தோமானால், பெரும்பான்மையான பிள்ளைகள் இரண் டாவது வகுப்பினராக இருப்பார்கள். மற்ற இரண்டு வகுப்பினரும், குறைவாகவே இருப்பார்கள். அந்தந்த பிரிவுக்கேற்றவாறு நாம் தனி முறையில் பாடங் கற்பிக்கவேண்டிய தவசியம். இது எப்படிச் செய்ய லாம் பிறகு எடுத்துக் கூறுகிறேன். இம்மாதிரியாக ஒவ்வொரு வகுப்பி லும் மூன்று வகுப்புகள் இருக்குமேயானால் ஒரு உபாத்தியாயர் ஒரேசம யத்தில் எப்படிப் பாடம் நடத்துவது என்று நாம் மனச்சோர்வு அடை யக்கூடும். ஆனால், நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளை நாம் முன் னேற்றம் அடையச் செய்யவேண்டியது நமது கடமையாயிருப்பின், நாம் அக்கடமையைச் செலுத்துவதில் சற்றேனும் பின்வாங்கக் கூடாது.

இதற்கேற்றவாறு நாம் நமது பாட அமைப்பையும், காரிய நியமிப்பை யும் மாற்றிக்கொள்வது அசாத்தியமான காரியமல்ல.

நாம் இதுவரையிலும் பிள்ளைகளை வருஷத்துக்கொருமுறைதான் மேல் வகுப்புக்கு மாற்றுவதென்று, ஓர் ஏற்பாட்டைக் கடைப்பிடித்து வந்தோம். இந்த ஏற்பாட்டின் குணதோஷங்களை நாம் சற்று ஆராய்ச்சி செய்யவேண்டும். இதன் முக்கிய குணம் வருஷக்கடைசியில் ஓர் பரீக்ஷை யின் மூலமாகப் பிள்ளைகளை மேல் வகுப்புக்கு மாற்றுவது உபாத்தியா யருக்கும், பள்ளிக்கூட அதிகாரிகளுக்கும் சௌகரியமாக இருந்தது, அப்படியே இருந்தும் வருகிறது. ஆனால் பரீக்ஷைகள் பிள்ளைகளின் திறமையை சீர்தூக்க ஏற்பட்டவைகளே யொழிய, உபாத்தியாயர்களுக் காக ஏற்பட்டவை யல்ல, என்பதை நாம் கவனிக்கவேண்டும். காரிய நியமிப்பு விஷயத்தில், இம்மாதிரியான ஏற்பாடு சௌகரியமானதே யொழிய பிள்ளைகள் விஷயத்தில் அது சற்றேனும் சரியானதல்ல. ஒரு வருஷத்தில் சாதாரண பிள்ளைகள் படிக்கக்கூடிய பாடங்களை, இவ்வேற் பாட்டின்மூலமாக எல்லாப் பிள்ளைகளையும் படிக்கச் செய்கிறோம். பாடங் களை ஆறுமாதங்களில் முடிக்கக்கூடிய கெட்டிக்காரப் பிள்ளைகள் மேல் வகுப்புக்குப் போவதற்கு இன்னும் ஆறுமாதங்கள் காத்திருக்கவேண்டி வருகிறது. ஒரு வருஷத்துக்குமேல் வேண்டிய சற்று மந்தமான பிள்ளை கள் ஒரே வருஷத்தில் முடிக்கவேண்டி வருகிறது. ஆகையால் இவ்வேற் பாடானது, வகுப்பிலுள்ள 40 பிள்ளைகளில் 16 பிள்ளைகளுக்கு ஏற்றதல்ல. இந்த ஏற்பாடு எவ்வளவு பயனற்றது என்று தெரிந்துகொண்டு, தற்கால த்தில் இங்கிலாந்தில் 'ஹாடோ' பள்ளிக்கூடங்கள் (Hadow Schools) என்று புதிய பள்ளிக்கூடங்கள் ஏற்படுகின்றன. இப்பள்ளிக்கூடங்கள் எந்தவிஷயத்தில் புதியவை என்றால் அவைகளின் காரிய நியமிப்பில்தான்.

இப்புதிய காரிய நியமிப்பின் மூலாதாரமான தத்துவம் என்ன வென்றால், பள்ளிக்கூடக் காரிய நியமிப்பானது தனிப் பிள்ளைகளின் சாமர்த்தியத்துக் கிசைந்தபடி இருக்கவேண்டு மென்பதே. வருஷம் முழுவதும், எப்போதெல்லாம் பிள்ளைகள் போதுமான தேர்ச்சி யடைகி றார்களோ, அப்போதே மேல் வகுப்புக்கு மாற்றப்பட வேண்டும். வருஷ முடிவில் நடக்கப்போகும் பரீக்ஷைக்கு அவர்கள் காத்துக்கொண்டிருக் கக்கூடாது. இரண்டாவதாக பிள்ளைகள் தங்கள் சாமர்த்தியத்திற்கேற்ற வாறு தங்கள் பாடங்களை உபாத்தியாயரின் உதவியைக்கொண்டு படிக்க வேண்டும். இதுவும் வெகு அவசியம். மூன்றாவதாக, வியாதி, இன்னும் இதர காரணங்கள் கொண்டு, தொடர்ச்சியாக ஆஜராகாத பிள்ளைகள் மறுபடி பள்ளிக்கூடம் வந்து சேரும்போது தாங்கள் விட்ட இடத்தி லிருந்து மறுபடியும் ஆரம்பிப்பதற்கு வேண்டிய ஏற்பாடு இருத்தலவசி யம். நான்காவதாக, வகுப்புப் பாகுபாட்டில் எந்தெந்த பாடங்களில் பிள்ளைகள் எந்தெந்த வகுப்புக்கு ஏற்றவர்களாக இருக்கிறார்களோ அந் தந்த வகுப்பில் படிக்க சௌகரியம் கொடுக்கப்பட வேண்டும்.

EXTRACT FROM FORT ST. GEORGE GAZETTE, PART I-B

Draft Amendments to rules relating to establishments under local bodies.

(*G. O. No. 1359, Education, dated 1st September 1941*)

No. 192.

Notification under Madras District Municipalities Act, 1920.

Draft Amendments.

1. To sub-rule (a) of Rule 17 of the said rules the following further proviso shall be added at the end, namely :—

"Provided further that when posts of teachers are abolished in elementary schools, lower elementary grade teachers who have completed 50 years of age or 20 years service qualifying for pension or provident fund shall be discharged before persons are selected for discharge under Clauses (1) to (4)."

2. To Rule 21 of the said rules the following further proviso shall be added at the end, namely :—

"Provided further that nothing contained in this rule shall be deemed to give a lower elementary grade teacher discharged from service under the last proviso to sub-rule (a) of Rule 17, a right to be re-appointed."

No. 193.

Notification under Madras Local Boards Act, 1920.

Draft Amendments.

1. To sub-rule (a) of Rule 18 of the said rules the following further proviso shall be added at the end, namely :—

"Provided further that when posts of teachers are abolished in elementary schools, lower elementary grade teachers who have completed 50 years of age or 20 years' service qualifying for pension or provident fund shall be discharged before persons are selected for discharge under Clauses (1) to (4)."

2. To Rule 22 of the said rules the following further proviso shall be added at the end, namely :—

"Provided further that nothing contained in this rule shall be deemed to give a lower elementary grade teacher discharged from service under the last proviso to sub-rule (a) of Rule 18, a right to be reappointed.

(Page 730, Gazette dated 23rd September 1941.)

செய்தி திரட்டு

(1) திருச்செந்தூர் தாலுகா ஆரம்ப பாடசாலை மானேஜர்கள் சங்கம், பிச்சிவிள்ளை.

3—9—41 ல் ஷை சங்கம் கூடி இரு தீர்மானங்களை நிறைவேற்றியது:—

(1) சங்கக் கூட்டங்களுக்கு வர அசௌகரியமாயிருந்தால் மானேஜர்கள் எழுத்துமூலம் அனுமதித்த பிரதிநிதிகளை அனுப்பலாம்.

(2) எட்டாம் வகுப்பு புதிய பரீக்ஷைக்கு எல்லாப் பாடங்களிலும் மாதிரிக்கேள்விகள் வெளியிடுவதற்கு உத்தரவு அளிக்கும்படி கனம் டைரக்டர் துரையவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

(2) திருச்செங்கோடு தாலுகா போர்டு ஆரம்ப ஆசிரியர் சங்கம், சங்கரி.

7—9—41 ல் ஷை சங்கம் நிர்வாகக் கமிட்டி யூனியன் தலைவர் ஸ்ரீ S. செல்லப்ப கவுண்டர் தலைமையில் நடந்தது.

அப்பொழுது பதினொரு தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டன.

(3) ஓமலூர் தாலுகா, போர்டு ஆரம்ப ஆசிரியர்கள் சங்கம், மேச்சேரி.

7—9—41 ல் ஷை சங்கத்தின் இரண்டாவது மகா சபை ஸ்ரீ A. கந்தசாமி அவர்கள் தலைமையில் கூடியது.

ஜில்லா கல்வி அதிகாரியும், டெபுடி இன்ஸ்பெக்டரும் ஜில்லாகில்டு கூட்டு காரியதரிசி ஸ்ரீ செங்கல்ராய அய்யரும் விஜயம் செய்து மேன்மை படுத்தினார்கள்.

பல தீர்மானங்கள் நிறைவேறிய பின்னர் ஜில்லா கல்வி அதிகாரி ஒரு சிறந்த சொற்பொழிவு ஆற்றினார். அதில் ஆசிரியர்கள் தங்கள் வேலையில் அதிக ஊக்கம் காட்டவேண்டுமென வேண்டிக் கொண்டார். பின்பு ஆசிரியர்களின் கஷ்டங்களுக்கும் குறைகளுக்கும் அவர் அனுதாபம் காட்டி அக்குறைகளை நீக்க தன்னால் இயன்ற வரை உழைப்பதாக உறுதி கூறினார்.

தலைவர் முடிவுரைக்குப் பின்னர் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

---

(4) போர்டு உயர்தர ஆரம்ப பாடசாலை பெற்றோர் சங்கம், கண்டச்சிபுரம்.

14—9—41 ல் ஸ்ரீ S. ராஜாங்க மய்யர் அவர்கள் தலைமையில் இச்சங்கம் கூடிற்று. அப்போது உதவி ஆசிரியர் ஸ்ரீ S. ரத்தின முதலியார் அவர்கள் 'பெற்றோர் ஒத்துழைப்பு' என்பது பற்றியும், மாணவன் ஸ்ரீ C. கண்ணன் என்பவன் 'கிராம புனருத்தாரணம்' என்பது பற்றியும், ஊர் நாட்டாண்மை ஸ்ரீ ச. குப்புசாமி முதலியாரவர்கள் 'கல்வி' என்பது பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். உல்லாசப் பிரயாணத்தின் பொருட்டு விஜயம் செய்திருந்த ஹைஸ்கூல் மாணவர்கள் "எல்லாருக்கும் பே! பே!" என்ற ஒரு சம்பாஷணையை நடத்திக் காட்டினார்கள்.

---

(5) அரு. நடேசன் செட்டியார் உயர்தர ஆரம்ப பாடசாலை, சிவகங்கை

இப்பாடசாலையின் எட்டாவது ஆண்டு விழாவும், மானேஜரின் 57 வது பிறந்ததினக் கொண்டாட்டமும் 10—9—41 ல் இன்கம்டாக்ஸ் ஆபீஸர் ஸ்ரீ T. கோபால் மேனன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடந்தேறியது. அவ்வமயம் சீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ K. N. ரெங்க ரத்ன சாஸ்திரி அவர்களும், S. சோமசுந்திரம் பிள்ளை யவர்களும் சிறந்த சொற்பொழி வாற்றினார்கள்.

---

(6) வேலூர் தாலூகா, கணியம்பாடி போர்டு ஹையர் எலிமெண்டரி பாடசாலை, பெற்றோர் சங்கம்

27-9-41, மாலையில் ஜில்லாக்கல்வி அதிகாரி ஸ்ரீ V. K. ராமன்மேனன் அவர்கள் தலைமையில் ஷ சங்கம் கூடிற்று. தலைவர் உரையில் பெற்றோர்கள் அடிக்கடி பாடசாலைகளுக்கு விஜயம் செய்து உற்சாகங் காட்டி தங்கள் குழந்தைகளை 5-வது வகுப்பு முடிய படிக்க வைக்க வேண்டுமென்றும், தினசரி ஒவ்வொரு வீட்டிலும் பெற்றோர் சங்கத்திற்காக ஒரு பிடி அரிசி அல்லது இதர தானியங்களைச் சேகரித்து ஏழைக் குழந்தைகளுக்கு, ஆகாரம் அளித்தல், பலகை, புஸ்தகம் வாங்கல் முதலிய வற்றிற்கு உபயோகப்படும் படியும் மொழிந்தார்.

ஷ்டி பாடசாலை ஆசிரியர் சங்கம்

27-9-41-ல் காலையில் ஜில்லா கல்வி அதிகாரி அவர்கள் தலைமையில் இச்சங்கம் கூடிற்று. Mr. P. துரைசாமி என்பவரால் 'குழந்தைகளின் மனோ நிலையை எவ்வாறு பயிற்றுவிப்பது' என்பதுபற்றி ஒரு வியாசம் படிக்கப்பட்டது. தலைவர் சங்கங்களை நடத்துவது எப்படி என்றும் ஆசிரியர்களின் வேலையைப்பற்றியும் சொற்பொழிவு செய்தார். J. D. I. ஸ்ரீ. K. சக்கரவர்த்தி ஐயங்கார் முதலியோர் கல்வி, ஆசிரியர்களின் கடமை என்பவைகளைப்பற்றி சொற்பொழிவு செய்தார்.

---

(7) செங்கற்பட்டு ஜில்லா, தாலூகா யூனியன்களின் பிரசிடெண்டுகள், செகிரிடரிகள் மகாநாடு.

இம்மகா நாடு 4-10-41 ல் சைதாப்பேட்டையில் நடைபெற்றது.

26-4-41 ல் ஜில்லா போர்டாருக்கு சமர்ப்பித்த மெமோரியலுக்கு அவர்கள் அளித்த பதில் வாசிக்கப்பட்டது.

1-7-41 லிருந்து சம்பள வெட்டை நீக்கியதற்கா ஜில்லா போர்டாருக்கு இம்மகா நாடு நன்றி செலுத்துகிறது.

26-4-41 க்குப் பிறகு ஆசிரியர்களின் குறைகளைப் போக்குவதற்காக எடுத்துக் கொண்ட முயற்சிகளின் சுருக்கத்தை ஸ்ரீ P. T. ஜகன்னாத ஐயங்கார் கூறினார்.

வட ஆற்காடு, மதுரை, முதலிய ஜில்லாக்களில் எஜிகேஷன் வரியை உயர்த்தி இருப்பதுபோல் இஜ்ஜில்லாவிலும் சற்று உயர்த்தி 1-7-34 முதல் 1-3-38 வரை விட்டுப்போன சர்வீஸைக் கணக்கிட்டு இங்கிரிமெண்டு கொடுக்கும்படிக்கும், புதிய திட்டங்கள் வருவதற்கு முன்னிருந்த ஆசிரியர்களுக்கு அவர்கள் அமர்ந்த தேதிமுதல் கணக்கிட்டு இங்கிரிமெண்டு கொடுக்கும்படிக்கும் இன்னும் சில குறைபாடுகளையும் கொண்ட மெமோரியல் ஒன்று தயாரிக்கப்பட்டு அனைவரும் கையொப்பமிட்டார்கள். இந்த மெமோரியலுடன் ஜில்லாபோர்டு பிரசிடெண்டு அனுமதி பெற்று ஸ்ரீ. P. T. ஜகன்னாத ஐயங்கார் தலைமையில் ஏழுபேர் கொண்ட தூது கோஷ்டி மூலம் கல்வி இலாக்கா டைரக்டர் அவர்களிடம் நேரில் தெரிவித்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

G. O. Mis. 1273 ப்படி சம்பள வெட்டை 1-4-41 முதலே எடுத்து விடவேண்டு மென்றும், ஜில்லா யூனியன்ஸ்தாபித்துக் கொள்ள உத்தரவளிக்கவும் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

14 பேர் கொண்ட ஜில்லா எக்ஸிக்யூடிவ் கமிட்டி ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

---

(8) அம்பா சமுத்ரம் தாலூகா உதவிபெறும் ஆரம்ப பாடசாலை ஆசிரியர் சங்கம், சேர்மாதேவி.

இச்சங்கத்தின் கால் வருஷ மகாநாடு 27-9-41 ல் நடைப் பெற்றது: ஜில்லா சங்க காரியதரிசி ஸ்ரீ A. சுந்தரேசய்யர் தலைமை வகித்தார் முகவுரையில்அரசாங்கத்தார் பலபாடசாலைகளை மூடிவருவதைப்பற்றியும் சில பாடசாலைகளுக்கு தவணை கிராண்டு மறுக்கப்படுவதைபற்றியும் வருந்திப் பேசினார். தென்னிந்திய ஆசிரியர் சங்க காரியதரிசி ஸ்ரீ S. T. ராமானுஜ ஐயங்கார் அவர்கள் தற்காலக்கல்வி விதிகள் எவ்வளவு பலனை அளித்திருக்கின்றன என்பதை விளக்கி ஒரு விரிவான பிரசங்கம் செய்தார்.

பின்பு பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அக்ராசனர் முடிவுரையில் வகுப்பறை மானேஜ்மெண்டைப் பற்றி டிவிஷனல் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ G.L. லோபோ அவர்கள் தூத்துக்குடியில் செய்த உபன்னியாசத்தின் சாரத்தை எடுத்துரைத்தார்.

பத்திராதிபர் குறிப்புகள்

நமது பள்ளிக்கூடங்களில் தேக்கம் (Stagnation) ஏற்படுகிற தென்றும், அதனால் நஷ்டம் ஏற்படுகிறது மல்லாமல் ஆரம்பக் கல்வி முன்னேற்றத்துக்கே தடையும் ஏற்படுகிறதென்று சொல்லப்படுகிறது. தேக்கம் என்றால் என்ன? இது ஏன் உண்டாகிறது? என்னும் விஷயங்களைச் சற்று ஆசிரியர்களும் கல்வி அதிகாரிகளும் கவனித்தல் அவசியமாகும். மாணவன் ஒரு வகுப்பில் ஒரு வருடம் படித்த பின்னர் மேல் வகுப்புக்குச் செல்லும் தேர்ச்சி யடையாவிட்டால், அவ்வகுப்பிலேயே மறுவருஷம் படிக்கவேண்டி யிருக்கும். இதைத்தான் தேக்கம் என்பார்கள். முதல் வகுப்பில் படிக்கும் பாலர்களில் பாதியளவுதான் 2-ம் வகுப்பிற்கு தேர்ச்சி பெறுகிறார்கள்.

ஒரு வருஷம் படித்த பின்னர் தேர்ச்சி பெறாமல் இருப்பானேன் என்று கேட்கலாம். இதற்குக் காரணங்கள் பல சொல்லப்படுகின்றன. ஆசிரியர்கள் போதுமான ஊக்கம் காட்டாதது காரணம் என்று கருதுவோர் சிலர். மாணவர்கள் சரியாக கவனித்துப் பாடங்களை கற்றுக்கொள்வதில்லை என்பார் பலர். எப்படி யிருந்தபோதிலும் இவ்விஷயத்தில் ஆசிரியர்கள் சிரத்தை யெடுத்துக்கொண்டு இம்மாதிரி பிள்ளைகள் பின் தங்குவதற்கு காரணங்கள் என்னவாயிருக்க வேண்டுமென்று ஆராய்ந்து பார்த்து, அக்காரணங்களை நீக்குவது அவசியமாகும். அதே வகுப்பில் இன்னொரு வருடம் படிப்பதில் பலன் அடையும் மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே யிருக்கும். தங்கள் புத்தியில் தாழ்ந்தவர்கள் என்ற எண்ணம் இவர்களுக்கு உண்டாய்விட்டால், கல்வியில் தேர்ச்சியடைவது கடினமாய்விடும். ஆனால் ஒரு வகுப்பில் ஒரு வருடம் படித்த பிறகு மேல் வகுப்புக்கு வேண்டிய தேர்ச்சி பெறாதவர்களை மேல் வகுப்பில் சேர்ப்பதும் தவறானதாகும்.

எனவே, மாணவர்களை தங்கள் பாடங்களில் அதிக கவனம் செலுத்துமாறு செய்யவேண்டும். மாணவர்களை உற்சாகப்படுத்தினால் அவர்கள் கண்டிப்பாய் அபிவிர்த்தி யடைவார்கள். அவர்கள் தவறுகளையே எடுத்துக்காட்டியும் அவர்கள் பாஷையிலும் இலக்கியத்திலும், எண்ணிலும், செய்கைகளிலும் செய்யக்கூடிய குறைகளையே எடுத்துக் காட்டி அவர்களை இழிந்து பேசுவதில், உற்சாகம் உண்டாகாது. தவிர, அதிகமாக படிப்பு, எழுத்து முதலிய வேலைகளை வீட்டில் செய்யும்படி கட்டாயப் படுத்தினாலும் சாதாரணமாக பயனளிப்பதில்லை. ஒரு மாணவன் தனது ஆசிரியர் தன்னுடைய நண்பர் என்றும் தனது அபிவிர்த்தியையே விரும்புகிறார் என்று எண்ணுமாறு ஆசிரியர் அவனுடன் பழகுதல் அவசியமாகும். இப்படிப்பட்ட அனுதாபமும் பழக்கமும் ஏற்பட்டால், இப்பிள்ளைகளின் பல உணர்ச்சிகளை ஆசிரியன் அறிந்து கொள்ளக் கூடும். இவ்வுணர்ச்சிகளைச் சரியாகத் திருப்தி செய்யப்பட முயன்றால், மாணவனுக்கும் ஆசிரியருக்கும் நல்ல நட்பும் அன்பும் ஏற்படும். அன்புடன் புத்திமதிகள் சொல்லி அவனை உற்சாகப்படுத்தினால் அவன் அபிவிர்த்தி அடைவதில் சந்தேகமேயில்லை. ஒரு வருஷம்படித்த பின்னர் தேர்ச்சி பெராமல் இருப்பானேன், என்று கேட்கலாம். இதற்குக் காரணங்கள் பல சொல்லப்படுகிறது. ஆசிரியர்களே இதற்குக் காரணம் என்று கருதுவோர் பலர்.